Follow us:

# தமிழன்
THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 513 சுபகிருது வருடம், சித்திரை மாதம் 21ஆம் திகதி புதன்கிழமை
(04.05.2022) ஹிஜ்ரி - 1443, ஷவ்வால் - 02 , 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50

## இடைக்கால அரசுக்கு ஆதரவில்லை!

**ஐக்கிய மக்கள் சக்தி திட்டவட்டம்**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகுவதாகவும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படுவதாகவும் உத்தரவாதம் எழுத்துமூலம் வழங்கப்படும் பட்சத்திலேயே, இடைக்கால அரசுக்கான ஆதரவு குறித்து பரிசீலிக்கப்படுமென ஐக்கிய மக்கள் சக்தி திட்டவட்டமாக தெரிவித்து விட்டது. ஆளுங்கட்சி சுயாதீன எம்.பிக்களை நேற்று சந்தித்தபோது இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இடைக்கால அரசுக்கு ஆதரவு வழங்குவது தற்போதைய பிரச்சினைகளுக்கு தீர்வாகாது என்றும் ஜனாதிபதி பதவி விலக வேண்டுமென்பதே மக்களின்... 02 பக்கம்

## இலங்கைக்கு சீனா 300 மில். யுவான் நிதி

இலங்கைக்கு 300 மில்லியன் யுவான் நிதியுதவி வழங்க சீன அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கும் சீனப் பிரதமர் லீ கெகியாங்கிற்கும் இடையில் அண்மையில் இடம்பெற்ற தொலைபேசி உரையாடலின் பெறுபேறாக இந்த நிதியுதவி இலங்கைக்கு வழங்கப்படவுள்ளது.

இந்த நிதியின் மூலம் இலங்கைக்கு அத்தியாவசியமான மருந்துகள், உணவுப்பொருட்கள், எரிபொருள் மற்றும் ஏனைய முக்கியமானப் பொருட்கள் பெற்றுக்கொள்ளப்படும் என பிரதமர் அலுவலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.



காலிமுகத்திடலில் நேற்றுக்காலை இடம்பெற்ற ரமழான் பெருநாள் தொழுகை (படப்பிடிப்பு - லலித் பெரேரா)

## பிரபல நடிகர் கரு காலமானார்



பழம்பெரும் நடிகர் வில்சன் கருணாரத்ன தனது 79ஆவது வயதில் நேற்று காலமானார்.

வில்சன் கரு என்று பிரபலமாக அறியப்படும் இவர், சிங்கள சினிமாவில் ஒரு மூத்த தற்காப்புக் கலைஞராவார்.

1974ஆம் ஆண்டு வெளியான 'ஹதவத் நெத்தோ' திரைப்படத்தில் நடிகராக அறிமுகமானதுடன், 250 படங்களுக்கு மேல் நடித்துள்ளார்.

## பிணைமுறி மோசடி பணத்தை பகிர்ந்த அரசியல்வாதிகள்!

**ஊழல் எதிர்ப்புக் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் வசந்த சமரசிங்க**



கடந்த மைத்ரி - ரணில் அரசாங்கத்தின் காலத்தில் நடந்த மத்திய வங்கி பிணைமுறி மோசடியுடன் சம்பந்தப்பட்ட பர்ப்பச்சுவல் ட்ரெசரீஸ் நிறுவனத்திடம் இருந்து அன்றைய... 02 பக்கம்

## அநுரகுமார சாட்டையடி!




### ஊழல் பெருச்சாளிகள், அரச அடிவருடிகளை அம்பலமாக்கினார்

•யோ.தர்மராஜ்

அரசாங்கத்தின் உயர் தலைவர்கள், அதிகாரிகள் எனப் பலரின் ஊழல் மோசடிகள் தொடர்பாக பல பரபரப்பு தகவல்களை தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க நேற்று வெளியிட்டார். இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்ற ஊடக சந்திப்புக்கு நூற்றுக்கணக்கான கோப்புகள் கொண்டுவரப்பட்டிருந்ததுடன், முன்னாள், இன்னாள் அமைச்சர்கள், அரசியல்வாதிகள், அரச அதிகாரிகளின் ஊழல், மோசடிகள் குறித்த தகவல்களை அநுரகுமார திசாநாயக்க அம்பலப்படுத்தினார். 02 பக்கம்

## உஷ்



இடைக்கால அரசுக்கு ஆதரவு வழங்கினால் சஜித்துக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் இல்லாமல் போகலாமென சஜித்தின் குடும்ப உறுப்பினர் ஒருவருக்கு அரச மேலிடத்திலிருந்து தகவல் சென்றுள்ளதாம். இதனால் இப்போதைக்கு இடைக்கால அரசுக்கு ஆதரவை வழங்க மாட்டாராம் சஜித்.

## அமைச்சரவைத் தீர்மானங்கள்

02.05.2022 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்




04 பக்கம்

## நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் பிரச்சினை!

**சீர்செய்ய 5 நாட்கள் செல்லுமாம்**

நுரைச்சோலையில் அமைந்துள்ள 270 மெகாவோட் மின் உற்பத்தி நிலையங்களில் ஒன்றில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, பழுதுபார்க்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இந்த பழுதுப் பார்த்தல் நடவடிக்கைகள் 5 நாட்களுக்கு நீடிக்கும் என்று மின்சாரத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## வெள்ளிக்கிழமை கறுப்புக் கொடிகளை ஏற்றி நாடளாவிய ஹர்த்தால் அனுஷ்டிக்க தீர்மானம்

02 பக்கம்

## ஹர்த்தாலுக்கு ஆதரவாக ரயில்களும் சேவை நிறுத்தம்



02 பக்கம்

## கமெண்ட் கந்தர்..



50 பேரின் ஒப்பங்கள் தான் இருக்குதாம்....போற போக்க பார்த்தால் அரசாங்கத்த நம்புகிற பிரேரணையாகிடுமோ தெரியேல்ல...

## நம்பிக்கையில்லாப் பிரேரணைகள்

**சபாநாயகரிடம் கையளிப்பு**

ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்திற்கு எதிரான இரண்டு நம்பிக்கையில்லாப் பிரேரணைகளை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் ஐக்கிய மக்கள் சக்தி நேற்று கையளித்துள்ளது.

அந்தப் பிரேரணைகளுக்கு நேற்று மாலைவரை 50 எம்.பிக்கள் வரையானோரே கையொப்பமிட்டிருந்ததாக சொல்லப்பட்டது.

## காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மகாநாயக்க தேரர்களுடன் சந்திப்பு



நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் 'கோட்டா கோ ஹோம்' மக்கள் போராட்டக் குழுக்களின் உறுப்பினர்கள் நேற்றுக்காலை கண்டியில் உள்ள மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகளை சந்தித்து ஆசிபெற்றனர். 02 பக்கம்

## ஆட்சி மாற்றம் குறித்து இன்னும் மயக்க நிலையில் இருக்கின்றோம்!

**யாழ்ப்பாணத்தில் சொன்னார் விக்கி**



அரசாங்கத்தின் ஆட்சி மாற்றம் தொடர்பில் இன்னும் மயக்கநிலையில்தான் இருக்கின்றோம் என தமிழ் மக்கள் தேசியக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஓய்வுபெற்ற நீதியரசர் சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்கள், அன்றாடத் தேவைக்கான பொருட்கள் மற்றும் எரிபொருளுக்கான தட்டுப்பாட்டினைக் கண்டுள்ளனர். தமிழ் மக்கள் மிகவும் கஷ்டமான சூழ்நிலையில்தான் இருக்கின்றார்கள். 02 பக்கம்

FUN BLASTER இடமிருந்து
மாதம் முழுவதும் Fun ஆக இருக்க மிகச்சிறந்த UNLIMITED பக்கேஜ்
Facebook WhatsApp மற்றும் YouTube
உடன் மேலதிக டேட்டா*



ரூ.347/- மட்டுமே
மேலதிக வரிகள் இல்லை
செயற்படுத்தல் ரீலோட், MyDialog App அல்லது #678# மூலம்
* 1GB Anytime Data மற்றும் 1GB Free Night Bonus உள்ளடக்கப்பட்டுள்ளது
* நிபந்தனைகளுக்கு உட்பட்டது
SD (360p) Video தரத்தினை வழங்குகின்றது
4G SIM அட்டையுடன் 4G ளூஅயசவிழநெ அவசியமாகும்
TRC/D/PRO/20/10
Dialog
எதிர்காலம் இன்றே.

## காலிமுகத்திடல்...

அடக்குமுறை, அநீதி, அநாகரிகமான ராஜபக்ஷ ஆட்சிக்கு எதிராக சங்க ஆணை பிறப்பிக்க வேண்டும் என அவர்கள் பீடாதிபதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும், ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்ட மரியாதைகள் நீக்கப்பட வேண்டும் என்றும், ராஜபக்ஷ குடும்பத்தின் விழாக்களில் பங்கேற்க வேண்டாம் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்ததுடன், பீடாதிபதிகளிடம் மகஜரொன்றையும் கையளித்தனர்.

## வெள்ளிக்கிழமை கறுப்புக்...

தொழிற்சங்கங்கள், நிறுவனங்கள், அரசியல் கட்சிகள் உள்ளிட்ட அமைப்புகள் வரும் வெள்ளிக்கிழமை நாடு தழுவிய ஹர்த்தாலை நடத்தத் தயாராகி வருகின்றன.

எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெறவுள்ள ஹர்த்தாலுக்கு அனைத்து தரப்பினரின் ஆதரவும் தேவை என தேசிய தொழிற்சங்க ஒருங்கிணைப்பு நிலையத்தின் இணை அழைப்பாளர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

“எதிர்வரும் 6ஆம் திகதி எமது நாட்டின் வரலாற்றில் மிகப்பெரிய வேலை நிறுத்தம் மற்றும் ஹர்த்தாலை நடத்தி ஊழல் நிறைந்த கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் ராஜபக்ஷ குடும்ப ஆட்சிக்கு இறுதிச் செய்தியை வழங்குவோம். 6ஆம் திகதிக்கு முன் புறப்பட வேண்டும். எனவே, இந்நாட்டு மக்களை போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

கைகளை இணையுங்கள். பணிகள் நிறுத்தப்படும். போக்குவரத்து நிறுத்தப்படும். ஒவ்வொருவரும் வீட்டிலிருந்து தங்கள் அருகிலுள்ள வீதிக்கு கறுப்புக் கொடியைக் கொண்டு வர வேண்டும். வீட்டில் கறுப்புக் கொடி ஏற்றுங்கள். நிறுவனங்களில் கறுப்புக் கொடி ஏற்ற வேண்டும். நாட்டு மக்களுடன் இணைந்து ராஜபக்ஷ குடும்ப ஆட்சிக்கு எதிராக உங்கள் கருத்துகளை வெளிப்படுத்தும் ஆற்றலைக் காட்டுங்கள்.

ஹர்த்தாலை வெற்றியடையச் செய்யுங்கள். இந்நாட்டில் உள்ள ஒட்டுமொத்த தொழிற்சங்க இயக்கமாகிய நாமும், இந்நாட்டிலுள்ள அனைத்து வெகுஜன அமைப்புகளும், அரசியல் கட்சிகளும் இணைந்து தற்போது அல்லது 6ஆம் திகதிக்குள் தீர்மானிக்கவில்லை என்றால் எதிர்வரும் 11ஆம் திகதி ஹர்த்தாலை மீள ஆரம்பிப்போம். அரசாங்கம் வீட்டிற்கு செல்லும் வரை இது நிற்காது” என்றார்.

இதேவேளை, எதிர்காலத்தில் முழு சுகாதார சேவையை உள்ளடக்கிய பணிப்புறக்கணிப்பு போராட்டம் நடத்தப்படும் என சுகாதார நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

## பிணைமுறி மோசடி...

ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் பணத்தை பெற்றுக் கொண்டுள்ளதாகவும் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் அவர்களில் ஒருவர் எனவும் ஊழல் எதிர்ப்பு குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் வசந்த சமரசிங்க நேற்று தகவல் வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் உள்ளிட்டோரின் ஊழல் மோசடிகள் தொடர்பான கோப்புகளை பகிரங்கப்படுத்தும் நிகழ்வில் கலந்துகொண்டு தகவல் வெளியிடும்போதே அவர் இதனை கூறியுள்ளார். அவர் மேலும் கூறியதாவது,

அன்றைய ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன, பிணை முறி மோசடி தொடர்பாக விசாரணை நடத்த நியமித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் 106 பக்கங்களை கொண்ட விசாரணை அறிக்கையை வெளியிடாமல் இன்னும் மறைத்து வைத்துள்ளனர்.

அந்த அறிக்கையை வெளியிடுமாறு தற்போதைய ஜனாதிபதியிடம் நான்கு முறை எழுத்து மூலம் கோரிக்கை விடுத்தபோதிலும் அந்த அறிக்கை இதுவரை வெளியிடப்படவில்லை.

106 பக்கங்களை கொண்ட அந்த அறிக்கையில் பிணைமுறி மோசடியில் சம்பாதித்த 3 ஆயிரத்து 250 மில்லியன் ரூபாவை பகிர்ந்துக் கொண்டவர்களின் விபரங்கள் இருக்கின்றன.

அதில் ரோஷி சேனாநாயக்க, தயாசிறி ஜயசேகர ஆகியோரின் பெயர்கள் பகிரங்கமாக பேசப்பட்டன. எனினும் பகிரங்கமாகாத பலரது விபரங்கள் அறிக்கையில் உள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை சேர்ந்த 25 நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சியை சேர்ந்த 52 நாடாளுமன்ற உறுப்பினர்களின் விபரங்கள் அதில் உள்ளன.

அவர்களில் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவரின் பெயரும் உள்ளது. இதனை தவிர அன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அவரது மகள், மகன், மருமகன் உட்பட அவரது குடும்பத்தினர் பிணைமுறி மோசடியில் சம்பாதித்த பணத்தை பெற்றுக்கொண்டுள்ளனர்.

அத்துடன், அன்றைய நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கும் அதில் தொடர்புள்ளது என தெரியவந்தது. அவருக்கு எதிராக நான்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன் இரண்டு வழக்குகள் விசாரிக்கப்பட்டு வருகின்றன எனவும் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

மரண அறிவித்தல்,
நினைவஞ்சலி,
மற்றும் பிறந்தநாள்
விளம்பரங்களை
குறைந்த கட்டணத்தில்
பிரசுரிக்க
வெறும் 1000/=
மட்டுமே...
அழையுங்கள்
0761393805

தமிழன் தமிழன் ஜூனியர்
கொழும்பு 01
முதல் 15 வரையிலான
பகுதிகளில் தமிழன்
(தினசரி, வாரஇதழ்),
ஜூனியர் பத்திரிகை
வீடுகளுக்கே விநியோகம்
செய்யப்படும்.
தொடர்பு - சந்திரகுமார்
0777983308




## இடைக்கால அரசுக்கு...

கோரிக்கை என்றும் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள் இங்கு சுட்டிக்காட்டியுள்ளனர்.

ரிரான் அலஸ் எம்.பியின் இல்லத்தில் நடந்த இந்த சந்திப்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பிக்கள் ராஜித, ஹர்ஷ, ரஞ்சித் மத்துமபண்டார, எரான் ஆகியோரும் சுயாதீன எம்.பிக்கள் சார்பில் விமல் வீரவங்ச, உதய கம்மன்பில, நிமல் சிறிபால டி சில்வா, தயாசிறி உட்பட்டோர் கலந்துகொண்டனர்.

பிரதி சபாநாயகர் தெரிவில் ஐக்கிய மக்கள் சக்தி விட்டுக்கொடுப்பை செய்யுமென்று இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. சுயாதீன எம்.பிக்கள் சார்பில் அநுர பிரியதர்ஷன யாப்பா அல்லது சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே ஆகியோரின் பெயர்கள் பரிசீலிக்கப்பட்டுள்ளன.

## ஹர்த்தாலுக்கு ஆதரவாக...

இம்மாதம் 6ஆம் திகதி முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தால் மற்றும் பணிப்புறக்கணிப்பு போராட்டத்துக்கு ஆதரவாக நாளை நள்ளிரவு (05) 12.00 மணி முதல் 24 மணி நேர பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாக ரயில்வே தொழிற்சங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியும் அரசாங்கமும் எதிர்வரும் 6ஆம் திகதி பதவி துறக்காத பட்சத்தில் எதிர்வரும் 11ஆம் திகதி முதல் தொடர்ச்சியான பணிப்புறக் கணிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாக தொழிற்சங்க ஒருங்கிணைப்பு நிலையம் தெரிவித்துள்ளது.

## ஆட்சி மாற்றம் குறித்து...

இந்தியா பொருளாதார ரீதியாக வடபகுதி மக்களுக்கு நன்மையினை பெற்றுக்கொடுக்கும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் குப்புசாமி அண்ணாமலை, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் தலைவர் செந்தில் தொண்டமான் உள்ளிட்ட குழுவினர்களை நேற்று காலை யாழ். கோவில் வீதியில் அமைந்துள்ள தமிழ் மக்கள் தேசியக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஓய்வு பெற்ற நீதியரசர் சி.வி. விக்கினேஸ்வரனை அவரது வாசஸ்தலத்தில் சந்தித்தனர்.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஓய்வு பெற்ற நீதியரசர் சி.வி விக்கினேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

நான் முன்னாள் வடமாகாண முதலமைச்சராக இருந்த போது வடக்கு மாகாணத்தினையும் கிழக்கு மாகாணத்தினையும் இணைந்த உயர்வீதி பாதையினை அமைக்க வேண்டும் என்றும் கரையோரமாக முல்லைத்தீவில் இருந்து திருகோணமலைக்கு பாதை அமைக்கவேண்டும் என்றும் கேட்டிருந்தேன்.

இதற்காக 1000 கோடி ரூபா கணித்து இருந்தோம். அதற்கான சகல விபரங்களையும் கொடுத்திருந்தோம். இதனை பற்றி இந்திய அரசாங்கத்துடன் கதைத்து நடவடிக்கை எடுக்கலாம் என்று கூறியிருந்தார். ஆட்சி மாற்றம் ரீதியாக பொருளாதார ரீதியாக திட்டங்களாக அமைத்திருக்கின்றோம் என்பதை முதலில் தெரிந்துகொள்ளவேண்டும் என்று அவர்களிடம் எடுத்து கூறியிருந்தேன்.

13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக 06 கட்சிகள் உள்ளிட்ட சம்பந்தனின் கையொப்பத்துடன் பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியிருந்தோம். 13ஆவது திருத்தச் சட்டத்தில் இருந்து வெளியேற்றி விட்டால் எங்களுக்கு எதுவும் கிடைக்காது என்பதை மனதில் வைத்து இருக்கவேண்டும் என்று தெரிவித்தேன்.

தமிழருக்கு அதிகாரம் குறைந்த சட்டம் என்றாலும் இப்போது இருப்பது 13ஆவது திருத்தச் சட்டம்தான். அதனையும் வெளியேற்றிவிட்டு சிங்கள பௌத்த சட்டம் இருந்ததால் தான் நாங்கள் கடிதமும் எழுதினோம் என்று கூறியிருந்தேன் என்று தெரிவித்தார்.

வேறு ஆட்சி மாற்றத்தின் ஊடாக பொருளாதார ரீதியாக முன்னேற்றத்தினை பெற்றுக்கொள்ளமுடியாது. சில தலைவர்கள் சர்வதேச நாணய நிதியம் பேசும்போது சில தலைவர்களின் பேச்சு எடுபடும், சிலரின் பேச்சு எடுபடாது. அவ்வாறான தலைவர்கள் இருந்தால் நல்லது. இதில் தனிப்பட்ட பிரச்சினைகள் கூடும். வரிகளை கூட்டுவார்கள். சில பொருட்களின் விலையினை கூட்டுவார்கள். இப்போது வருமானத்தினை கூட்டி செலவீனத்தினை குறைக்கவேண்டும்.

இதுதான் காணப்படுகின்றது. இதில் நாட்டின் தலைவர்களின் கருத்துகளை கேட்பார்கள். மற்றவர்களுடைய கருத்தினை புறக்கணிக்கக்கூடும். அரசாங்கத்தின் மாற்றத்தினால் நன்மைபெறும் என்று எதனையும் கூறமுடியாது. தலைமையினை மாற்றுகின்ற போது முன்னர் இருந்த அதே கட்சியினர் திரும்பவும் பிரிந்து அதே கட்சியில் இருக்கின்றனர். இந்த நாடகத்தில் இருக்கின்ற சூழல் காணப்படுகின்றது.

எதிர்க்கட்சியினர் கூறியிருக்கின்றார், இதனை சேர்ந்து செயலாற்ற முடியாது என்று கூறியிருக்கின்றபோது அதே முன்னொரு கட்சியில் இருந்த 11 கட்சியின் தலைவர்கள் நாடகம் போடப் பார்க்கின்றனர். மக்கள் கோரும் கோரிக்கைக்கு தலையசைப்பதாக தெரியவில்லை. ஆட்சி மாற்றம் தொடர்பில் இன்னும் மயக்கநிலையில் தான் இருக்கின்றோம்.

என்னவாக இருந்தாலும் இராணுவ ரீதியான இராணுவக் கட்டமைப்பின் கீழ்தான் இன்னும் வாழ்ந்து வருகின்றனர். இது சரி இல்லை? நாங்கள் பொருளாதார ரீதியாக பிரச்சினைகளில் இருக்கின்றோம் என்றால் இராணுவத்தினரின் தொகை நன்றாக குறையவேண்டும். போர் முடிந்ததுடன் இராணுவத்தினை குறைப்பதுதான் வழக்கம். இங்கு அது நடைபெறவில்லை எனவும் விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

## அநுரகுமார சாட்டையடி!...

கொழும்பு இலங்கை மன்றத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த “நாட்டை நாசமாக்கிய திருட்டுக் கும்பலை ஒட்டுமொத்தமாக அம்பலப்படுத்தல்” எனும் தொனிப்பொருளின்கீழ் ‘ஊழல் எதிர்ப்புக் குரல்’ எனும் அமைப்பால் நேற்று (03) விசேட ஊடக சந்திப்பொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இங்கு கொண்டுவரப்பட்டிருந்த சில முக்கிய கோப்புகளை எடுத்து அதிலுள்ள மோசடிகள் தொடர்பாக அவர் தெளிவுபடுத்த ஆரம்பித்தார். அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

மக்களிடமிருந்து கோடிக்கணக்கில் கொள்ளையடித்த அரசியல்வாதிகளிடமிருந்து அவை அனைத்தையும் மீளப் பெற வேண்டும் என்றே இன்று அனைவரும் கோருகின்றனர். இந்த ஆபத்துக்கு பிரதான காரணம் இந்த மோசடிகளே என்பதையும் மக்கள் புரிந்துகொண்டுள்ளனர். இது குறித்து நாங்கள் இதற்கு முன்னர் கூறினாலும் அவை சமூகமயமாக்கப்படவில்லை. எனவே, மீண்டும் இந்த மோசடிகளை வெளிப்படுத்துவதற்கு தீர்மானித்தோம். இன்று எங்கள் முன்னால் இருப்பது ஊழல் மோசடிகளின் ஒரு பகுதி மாத்திரமேயாகும். எங்களிடம் இன்னும் இருக்கின்றன.

எங்கள் மீது நம்பிக்கை வைத்தே அரச அதிகாரிகள், விசாரணை அதிகாரிகள் உள்ளிட்ட பலர் தங்களுடைய உயிரையும் பணயம் வைத்து எங்களிடம் இந்த தகவல்களை வழங்கினர். ஆனால், எங்களிடம் இவ்வாறான தகவல்கள் இருக்கின்றதா என பலருக்கும் சந்தேகம் இருந்தது. அத்தோடு, பலரின் கோரிக்கைக்கமையவே இந்த தகவல்களை இன்று (நேற்று 03ஆம் திகதி) நாங்கள் வெளியிடுகின்றோம்.

எங்களிடமுள்ள தகவல்களில் முறைப்பாடு செய்யப்பட்டவை, நிறுவனங்களால் மூடி மறைக்கப்பட்டவை, சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருப்பவை, சட்டமா அதிபர் திணைக்களத்தினால் மறைக்கப்பட்டவை, நீதிமன்றங்களினால் தொழில்நுட்ப காரணங்களுக்காக நிராகரிக்கப்பட்டவை போன்ற பல தகவல்கள் இருக்கின்றன. இவற்றில் சிலவற்றை நாங்கள் தேர்ந்தெடுத்து வெளியிடுகின்றோம்.

இலங்கையில் ஐக்கிய அமெரிக்காவின் தூதுவராக இருந்த ஜாலிய விக்ரமசூரிய மீது, அமெரிக்காவில் வழக்கு ஒன்று தொடரப்பட்டிருந்தது. குறிப்பாக, இலங்கைக்காக தூதரகமொன்றை கொள்வனவு செய்யும்போது மோசடியில் ஈடுபட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இது குறித்து நாங்கள் வழக்கு தொடர்ந்திருந்தாலும் பிணை பெற்று நாட்டை விட்டே வெளியேறினார். ஆனால், அவர் மஹிந்த ராஜபக்ஷவின் உறவு முறை சகோதரராவார்.

அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட 62 இலட்சத்து 50 ஆயிரம் டொலரில் 33 இலட்சத்து 25 ஆயிரம் டொலர் ஊழலாக பெற்றுள்ளதாகவே குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. தூதரகம் கொள்வனவுக்கு செலவு செய்த 52வீதம் மோசடி செய்துள்ளார். இதனை அவரும் நீதிமன்றத்திற்கு முன்பாக ஏற்றுக்கொண்டுள்ளார்.

அடுத்து, பெண்டோரா பேப்பர் வெளியிட்ட மோசடிகள் அதிகம் பேசப்பட்டன. திருக்குமார் நடேசன் மற்றும் நிருபமா ராஜபக்ஷவின் 160 மில்லியன் டொலருக்கு அதிகமான மோசடிகள் வெளிவந்தன.

முன்னாள் நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷவின் சொத்துகளில் பெரும்பாலானவை வர்த்தகர் திருக்குமார் நடேசனின் பெயரில் உள்ளதாக நாங்கள் பலமுறை கூறினோம்.

தேர்தல் அறிவிக்கப்பட்டால் அமைச்சுகளின் அத்தியாவசியக் கொடுப்பனவுகள் தவிர ஏனைய அனைத்து செலவுகளும் நிறுத்தப்படும். ஆனால், கடந்த ஆட்சியில் நீர்ப்பாசன அமைச்சராக இருந்த நிமல் சிறிபால டி சில்வாவின் அமைச்சின் கீழ் 2014.12.24ஆம் திகதி ஆயிரம் மில்லியனும் 2015.01.01ஆம் திகதி 2 ஆயிரத்து 9 மில்லியனும் 2015.01.06ஆம் திகதி ஆயிரத்து 3 மில்லியனுமாக 4 ஆயிரத்து 100 மில்லியனுக்கான ஜின் நில்வால திட்டத்துடன் சீன சி.ஏ.எம்.சி. இன்ஜினியரிங் கோ லிமிடெட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது.

சீனா சி.ஏ.எம்.சி இன்ஜினியரிங் கோ லிமிட்டெட் ஹொங்கொங்கில் வங்கிக் கணக்கு ஒன்றினை வைத்திருப்பதுடன், அது வெவ்வேறு சந்தர்ப்பங்களில் 5 மில்லியன் டொலர்களை ரூட் இன்டர்நேஷனலுக்கு வழங்கியுள்ளது. குறித்த நிறுவனம் நடேசனுக்கு சொந்தமானதாகும். ரூட் இன்டர்நேஷனல் நிறுவனமானது, கொள்ளுப்பிட்டியில் உள்ள இலங்கை வங்கிக்கு நிதியை மாற்றியுள்ளது. அந்தக் கணக்கில் வைப்பு செய்யப்பட்ட பணத்தில் மல்வானையில் உள்ள பிரபல சொத்துகளை கொள்வனவு செய்ய செலவு செய்துள்ளனர்.

அடுத்து, எயார் பஸ் கொள்வனவு தொடர்பாக சர்வதேச ரீதியில் விசாரணை முன்னெடுக்கப்பட்டது. எயார் பஸ் கொள்வனவிற்காக இலங்கையில் எயார் லங்கா பணிப்பாளர் சபையானது, சமல் ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் கூடியது. அவருடைய மகன் பணிப்பாளர் சபையின் உறுப்பினராக இருந்தார்.

இதன் போது, எயார் பஸ் கொள்வனவில் ஏ 330 வகை விமானம் 6, ஏ 350 வகை விமானம் 4 நேரடி கொள்வனவு அடிப்படையிலும் ஏ 350 வகை விமானம் 4 குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்ய தீர்மானம் எடுக்கப்பட்டது. இவை 2.2 பில்லியன் டொலருக்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இலங்கை வரலாற்றில் மிகப்பெரும் கொள்வனவாக இந்த எயார் பஸ் கொள்வனவு காணப்படுகின்றது.

இந்த கொள்வனவின்போது, ஏ 330 விமானம் விநியோகிக்கப்பட்டதன் பின்னர் ஒரு மில்லியன் டொலர் அடிப்படையிலும் ஏ 350 விமானம் விநியோகிக்கப்பட்டதன் பின்னர், 1.16 மில்லியன் டொலர் அடிப்படையிலும் குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படும் 4 விமானங்களுக்கு 3 இலட்சம் டொலர் அடிப்படையிலும் கப்பம் செலுத்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. மொத்தமாக 16.11 மில்லியனாகும். எனினும், ஆட்சி மாற்றம் ஏற்பட்டதால் முழு தொகையும் பெற்றுக்கொள்ளப்படவில்லை. அவற்றில் ஒரு தொகை அவுஸ்திரேலியாவிலுள்ள ஒரு கணக்கிற்குச் சென்று அங்கிருந்து இலங்கையிலுள்ள மூன்று கணக்குகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அதில் ஒன்றே நிமல் பெரேராவின் கணக்காகும். இது லண்டனில் வெளிவந்த மோசடியாகவும் காணப்படுகின்றது.

இந்த எயார் பஸ் ஒப்பந்தத்தை நல்லாட்சி அரசாங்கம் இரத்து செய்வதற்கு பெரும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. இந்த செயற்பாட்டுக்காக 115 மில்லியன் டொலர் செலுத்தப்பட்டுள்ளது. இது நான்கு எரிபொருள் கப்பலுக்கு சமனானது.

அடுத்து, அம்பாந்தோட்டை வைத்தியசாலைக்கு வைத்திய உபகரணங்கள் மற்றும் அடிப்படை வசதிகளை பெற்றுக்கொள்வதற்காக 15 மில்லியன் டொலர் அவுஸ்திரேலிய மருந்தக நிறுவனம் பெற்றுக்கொண்டுள்ளது. இந்தப் பணமும் நிமல் பெரோவின் கணக்கிற்கு அனுப்பப்பட்டுள்ளது விசாரணைகளில் வெளிவந்துள்ளன.

அடுத்து, நாமல் ராஜபக்ஷ, யோஷித்த ராஜபக்ஷ தொடர்பான மோசடி ஆவணம் எம்மிடம் இருக்கின்றது. சிறிபோபுர வனப்பகுதியில் உறுதிப்பத்திர இலக்கம் 41. 29 0.05 ஹெக்டேயர் இடம் 1.6 மில்லின் ரூபாவிற்கும் உறுதிப்பத்திர இலக்கம் 41.30, 1.6 மில்லியன் ரூபாவிற்கும் உறுதிப்பத்திர இலக்கம் 41.31, 1.6 மில்லியன் ரூபாவிற்கும் ஓ.பி ட்ரக் வாகனம் 80 மில்லியன் ரூபாவிற்கும் பத்தரமுல்லையிலுள்ள சி.எஸ்.என் அலைவரிசையுள்ள கட்டிடம் 200 மில்லியன் ரூபாவிற்கும் நுகேகொடையிலுள்ள இடமொன்று 1.38 மில்லியனுக்குமாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் மகனான யோஷித்த ராஜபக்ஷவின் பெயரில் 32 இடங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

அடுத்து, கிழக்கு மாகாண கடலில் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட 45 கிலோ தங்கம் சுங்கத் திணைக்களத்திடம் வழங்கப்பட்டது. இந்த நிலையில் 24 மணித்தியாலங்களுக்குள் சுங்கத் திணைக்களத்துடன் பேசிய அப்போதைய கடற்படைத்தளபதி, சிலை ஒன்றை நிறுவுவதற்காக கைப்பற்றப்பட்ட தங்கத்தில் 8 கிலோவை தருமாறு கேட்டுள்ளார்.

எனினும், ஒரு மாதம் கழித்த பின்னர் எவரும் உரிமைக்கோராதவிடத்தே அதனை தரமுடியும் என்று சுங்கத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டது. இதற்கு பதிலாக ஏற்கனவே உரிமை கோரப்பட்டதாக தங்கம் மற்றும் இலங்கை வங்கி ஆகியவற்றில் இருந்து பெறப்பட்ட பதினொன்று அரை கிலோ தங்கத்தினால் புத்தர் சிலையொன்று அமைக்கப்பட்டுள்ளது. எனினும் சந்தஹிரு சேயவில் குறித்த தங்கச்சிலை நிறுவப்படவில்லை.

“சந்தஹிரு செய” என்ற படையினரின் நினைவகம் ஒன்றை அமைப்பதற்காக சுங்கத்திணைக்களத்தில் இருந்து பெறப்பட்ட பெருந்தொகை தங்கத்தின் மூலம் செய்யப்பட்ட ஒரு அடி உயரமுள்ள புத்தபெருமானின் சிலைக்கு என்ன நடந்தது என்பது இதுவரை தெரியவில்லை.

அடுத்து, எவன்கார்ட் நிறுவனத்துடன் கடற்படையினர் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி 25 வீத வருமானம் கடற்படைக்கு தரப்படவேண்டும்.

எனினும் முன்னர் கடற்படைத் தளபதிகள் சிலர், கடற்படைக்கு வரும் வருமான வீதத்தை குறைத்தனர். அதாவது எவன்கார்ட் நிறுவனத்துக்கு கிடைக்கவேண்டிய வருமானம் அதிகரிக்க செய்யப்பட்டது. இதற்கு பதிலாக குறித்த முன்னாள் தளபதிகள் ஓய்வுப்பெற்றதும் அவர்களுக்கு எவன்கார்ட் நிறுவனத்தில் தொழில் வழங்கப்பட்டுள்ளது.

அடுத்து, ஊழல் நடவடிக்கையின்போது அமைச்சர் ஒருவர் தமது காலம் முடிவடைந்து வாகனத்தை அமைச்சுக்கு திருப்பி கொடுத்தபோது, அதில் உள்ள இயந்திரத்துக்கு பதிலாக பழுதடைந்த இயந்திரம் பொருத்தப்பட்டு அது திருப்பிக் கொடுக்கப்பட்டது.

அடுத்து, நல்லாட்சி அரசாங்க காலத்தில் சஜித் பிரேமதாச 3 பில்லியன் ரூபா மோசடியுடன் தொடர்புபட்டுள்ளார். 2015 முதல் 2019 வரையான காலத்தில் தேசிய மத்திய கலாசார நிதியத்தின் நிதி முறைகேடாக பயன்படுத்தப்பட்டுள்ளது. முன்னாள் கலாசார அமைச்சரின் 146 செலவு அறிக்கைகள் காணப்படுகின்றன.

நிதியம் மற்றும் நிதியத்தின் உறுப்பினர்களின் எந்த அனுமதியும் இன்றி நிதியத்தின் பணம் செலவிடப்பட்டுள்ளது. சஜித் பிரேமதாசவின் நேரடியான உத்தரவின் கீழேயே இந்த செலவுகளை செய்ததாக சாட்சியமளிக்கப்பட்டுள்ளது.

செலவு செய்து முடிந்த பின்னர் 2019.11.15 ஆம் திகதி, ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் ஏற்கனவே செலவழிக்கப்பட்ட அந்த நிதிக்கு அனுமதிகோரி அவசர பணிப்பாளர் குழு நியமிக்கப்படுகிறது. ரணில் விக்ரமசிங்க, ஜோன் அமரதுங்க, மங்கள சமரவீர, சஜித் பிரேமதாச, அகில விராஜ், மனோ கணேசன், பேர்னாட் பிரியந்த ஆகியோர் பணிப்பாளர்கள் குழுவில் இருந்தனர்.

பணிப்பாளர் குழுவின் தலைவர் என்ற முறையில் ரணில் விக்ரமசிங்க இதில் கையெழுத்திடவில்லை. பிரதமரின் செயலாளர் ஏக்கநாயக்க கையெழுத்திட்டுள்ளார். அகில விராஜ் உட்பட மேலும் சிலர் கையெழுத்திடவில்லை. இது தொடர்பாக விசாரணை நடைபெறுகிறது. விசாரணை அறிக்கை எமக்கு நேற்று (நேற்று முன்தினம்) கிடைத்தது. அதனை சரியாக தொகுத்துக்கொள்ள முடியவில்லை. மத்திய கலாசார நிதியத்தின் சுமார் மூன்று பில்லியன் ரூபா நிதி முறைகேடு தொடர்பான கோப்பு என்னிடமுள்ளது.

அடுத்து, கால்நடை வள அமைச்சு பதவியை அமரர் ஆறுமுகன் தொண்டமான் வகித்தபோது, வாகனங்களுக்கு எரிபொருள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டமை தொடர்பான தகவல்கள் இருக்கின்றன. குறிப்பாக, அவர் 14க்கும் மேற்பட்ட வாகனங்களை வைத்திருந்ததுடன், அதற்கு மில்லியன் கணக்கில் எரிபொருள் நிரப்பியுள்ளார். அதனை பார்க்கும் போது அவர் எரிபொருளை குடித்தாரோ தெரியவில்லை என்றார்.

இது போன்ற பல ஊழல் மோசடிகளை வெளியிட்ட அவர், வரும் காலங்களில் தொடர்ந்து இவ்வாறு பல ஊழல் மோசடிகளை வெளியிடுவதாகவும் கூறினார்.

# அரசாங்கத்தை பதவி விலகக்கோரி பிக்குகள் கொழும்பில் ஆர்ப்பாட்டம்





(படப்பிடிப்பு – எஷான் தஸநாயக்க)



"அரசாங்கத்தை துரத்துவோம், மக்கள் அதிகாரத்தைக் கட்டியெழுப்புவோம்" என்ற தொனிப்பொருளில் அனைத்து பல்கலைக்கழக பிக்குமார் ஒன்றியத்தினால் நேற்று (03) கொழும்பில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

கொழும்பு விகாரமகாதேவி பூங்காவுக்கு அருகிலிருந்து பேரணியாக கொழும்பு, கோட்டையில் அமைந்துள்ள ஜனாதிபதி செயலகம் வரை சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அதன்பின்னர் காலிமுகத்திடலில் முன்னெடுக் கப்பட்டுவரும் மக்கள் போராட்டத்திலும் கலந்துகொண்டு தமது எதிர்ப்புகளையும் கோஷங்களையும் எழுப்பியிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் காரணமாக காலிமுகத்திடலில் போக்குவரத்துத் தடையும் ஏற்பட்டிருந்ததுடன், பாரிய எண்ணிக்கையிலான பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

# அலரிமாளிகைக்கு முன்னால் போராடுவோர் மீது தாக்குதல்!

## திட்டம் தீட்டப்பட்டுள்ளதாக சரத் பொன்சேகா தகவல்



கொழும்பு, அலரிமாளிகைக்கு முன்னால் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்களை பாதுகாப்புப் பிரிவினரைகொண்டு தாக்குதல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக நம்பத்தகுந்த தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் விளக்கமளித்து அவரது முகப்புத்தகக் கணக்கில் பதிவொன்றை இட்டே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அந்த பதிவில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அலரிமாளிகைக்கு முன்னால் அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் அப்பாவி மக்கள் மீது பாதுகாப்புப் பிரிவினரினூடாக தாக்குதல் நடத்தவும், அந்தப் போராட்டத்திலிருந்து அவர்களை துரத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதாக நம்பத்தகுந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆர்ப்பாட்டக்காரர்களே ஒன்றிணையுங்கள். அணித் திரளுங்கள். மக்களின் இறையாண்மையை அடக்கும் பொலிஸ் அதிகாரத்தை எதிர்த்து நில்லுங்கள்.

# தேசிய இணக்க அரசாங்கத்துடன் இணைய ஜே.வி.பிக்கு அழைப்பு



அரசியலிலுள்ள இலஞ்ச, ஊழல்களை ஒழிப்பதற்காக தேசிய இணக்க அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட அழைப்பு விடுப்பதாக தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர தெரிவித்தார்.

கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று (03) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது அரசியல் நிர்வாகக் கட்டமைப்பில் பாரிய திருட்டுகள் இருக்கின்றன. அதனை நாங்களும் ஒப்புக்கொள்கிறோம். இந்தத் துறைகளில் காணப்படும் இலஞ்ச, ஊழலை கட்டப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும்.

இதுவே தேசிய இணக்க அரசாங்கத்தின் வேலைத்திட்டம். அது மாத்திரமல்ல, அரசியலில் காணப்படும் இலஞ்ச, ஊழலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவேண்டியது தேசிய இணக்க அரசாங்கத்தின் யோசனையும் பொறுப்புமாகும்.

மக்கள் விடுதலை முன்னணிக்கு பகிரங்க யோசனையொன்றை முன்வைக்கிறேன். மக்கள் விடுதலை முன்னணியால் முடிந்தால் இந்த இலஞ்ச, ஊழல்களை இல்லாதொழித்து அவற்றுடன் தொடர்புடையவர்களுக்கு தண்டனையளிக்க வேண்டும்.

உண்மையான குற்றவாளிகளின் முகத்திரைகளை கிழித்தெறிய மக்கள் விடுதலை முன்னணி நடவடிக்கை எடுக்க வேண்டும். உங்களிடமிருக்கும் கோவைகளை எடுத்துக்கொண்டு தேசிய இணக்க அரசாங்கத்துடன் இணையவேண்டும். எங்களின் தேசிய சபையுடன் இணைந்து அதன் பொறுப்பை மேலும் வலுப்படுத்த வேண்டும். ஊழலை ஒழிக்கும் பொறுப்பை மக்கள் விடுதலை முன்னணிக்கு வழங்க தயாராக இருக்கிறோம்.

எங்கள் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப் படுமாக இருந்தால் எந்தவொரு தண்டனையாக இருந்தாலும் அதனை மகிழ்ச்சியாக ஏற்றுக்கொள்வோம் - என்றார்.

# இலங்கை தமிழர் மண்டபம் அகதிகள் மறுவாழ்வு முகாம் வாசலில் போராட்டம்

## தனி ஆட்சியர் இலஞ்சம் கேட்பதாக குற்றச்சாட்டு



(மன்னார் நகர் நிருபர்)

மண்டபம் அகதிகள் மறுவாழ்வு முகாமில் தனக்கு ஒதுக்கப்பட்ட வீடு சேதமடைந்துள்ளதால் தனி ஆட்சியரின் அனுமதியுடன் அருகே காலியாக இருந்த வீட்டை சொந்த செலவில் புனரமைத்து பயன்படுத்தி வந்த நிலையில், புதிதாக வந்த இலங்கைத் தமிழர்களுக்கு அதை ஒதுக்கி தனது உடைமைகளை வெளியில் வீசியதாகக் கூறி இலங்கை ஈழத்தமிழ் பெண் ஒருவர் மண்டபம் அகதிகள் முகாம் வாசல் முன்பு நேற்று (03) நீதி கோரி போராட்டத்தில் ஈடுபட்டார்.

இலங்கையில் ஏற்பட்ட இறுதிக்கட்ட போரின்போது இலங்கையில் வசித்த ஈழத் தமிழர்கள் பெரும்பாலானோர் தங்களது உயிர்களை காப்பபற்றிக்கொள்ள தனுஷ்கோடி வழியாக தமிழகத்துக்குள் அகதிகளாக வந்தனர். அவர்களை மண்டபம் அகதிகள் மறுவாழ்வு முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது மண்டபம் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் 450 குடும்பங்களைச் சேர்ந்த 1,419 இலங்கைத் தமிழர்கள் அங்கு வசித்து வருகின்றனர். மண்டபம் அகதிகள் முகாமில் 400இற்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன.

இதில் தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக அங்கிருந்து வரக்கூடிய இலங்கைத் தமிழர்களை தங்க வைப்பதற்காக 147 வீடுகள் புனரமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், இறுதிக்கட்டப் போரின்போது வந்து மண்டபம் அகதிகள் முகாமில் தங்கியுள்ள பெரும்பாலானவர்களின் வீடுகள், மிகவும் சேதமடைந்துள்ளதால் காலியாக உள்ள வீடுகளை மறுவாழ்வு முகாம் சிறப்பு தனி ஆட்சியர் அனுமதியுடன் தங்களது சொந்த செலவில் புனரமைத்து குடும்பத்துடன் வசித்து வருகின்றனர்.

அதில் பெரும்பாலான வீடுகளில் புதிதாக வரக்கூடிய இலங்கை தமிழர்கள் தங்கவைக்கப்பட்டு அதில் தங்கியிருந்தவர்கள் அப்புறப்படுத்தப்படுகின்றனர்.

இதனிடையே வவுனியாவிலிருந்து கடந்த 12 ஆண்டுகளுக்கு முன்பு அகதியாக வந்த ராசிய பேகம் என்பவரின் குடும்பத்தினர் வசித்துவரும் வீடு முற்றிலும் சேதமடைந்துள்ளதால் பக்கத்திலுள்ள வீட்டை சொந்த செலவில் புனரமைத்து வாழ்ந்து வருகின்றனர்.

நேற்று முன்தினம் (02) வந்த ஐந்து இலங்கை தமிழர்களுக்கு ஒதுக்கி இவரை குடும்பத்துடன் வீட்டை விட்டு வெளியே அனுப்பிவிட்டு வீட்டில் இருந்த பொருட்களை அகற்றியுள்ளனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்த பெண் மண்டபம் அகதிகள் மறுவாழ்வு முகாம் வாசலில் போராட்டத்தில் ஈடுபட்டார்.

மேலும் மண்டபம் அகதிகள் மறுவாழ்வு முகாம் தனி ஆட்சியர் தொடர்ந்து இலங்கை முகாம்களில் வசிக்கும் மக்களிடம் இலஞ்சம் கேட்பதாகவும் பணம் தராததால் முன்விரோதம் காரணமாக தங்களை அந்த வீட்டை விட்டு காலி செய்து வெளியே அனுப்பிவிட்டதாகவும், பல வீடுகள் இன்னும் புனரமைக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ள வீடுகளை ஒதுக்காமல் தங்களது வீட்டை மட்டுமே ஒதுக்கி குழந்தைகளுடன் வெளியே அனுப்பியதாக அவர் குற்றஞ்சாட்யுள்ளார்.

தமிழக முதல்வர் உடனடியாக இந்த விடயத்தில் தலையிட்டு மண்டபம் அகதிகள் மறுவாழ்வு முகாமை ஆய்வுசெய்ய வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளார்.

இதேபோல் தனி வீடு மற்றும் தனி பதிவு கேட்டு கடந்த திங்கட்கிழமை மண்டபம் அகதிகள் மறுவாழ்வு முகாமில் வசித்துவரும் 3 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியாரை சந்தித்து மனு அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# போலி விசாக்களினூடாக இத்தாலிக்கு செல்ல முயற்சித்த ஐவர் கைது

போலி விசாக்களை பயன்படுத்தி இத்தாலி செல்ல முயற்சித்த இலங்கையர்கள் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் வெளியேறும் பகுதியில் வைத்து குடிவரவு-குடியகல்வு அதிகாரிகளால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மாரவில பகுதியைச் சேர்ந்த குறித்த ஐவரினதும் விசாக்கள் தொடர்பில் ஏற்பட்ட சந்தேகம் காரணமாக முன்னெடுக்கப்பட்ட சோதனையில் அவை போலியாக தயாரிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினால் தாம் இத்தாலிக்கு செல்ல திட்டமிட்டதாக குறித்த ஐவரும் அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளனர்.

மன்னாரிலுள்ள தரகர்கள் ஊடாக போலி விசாக்கள் தயாரிக்கப்பட்டுள்ளமை, குடிவரவு-குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்ட ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளுக்காக குறித்த ஐவரும் விமான நிலைய குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


# மரண அறிவித்தல்

தோற்றம்

08 ★ 06 ★ 1976



மறைவு

03 ★ 05 ★ 2022

## திருமதி ஜெ.வசந்தவேணி

இறக்குவானை ஹெதர்லி தோட்ட பிரதம குமாஸ்தாவாக பணியாற்றிய திருமதி ஜெயரத்னம் வசந்தவேணி அவர்கள் 03.05.2022 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார். அன்னார் திரு. ஜெயரத்னம், திருமதி பூரணம்பாள் ஆகியோரின் அன்பு மகளும், ஜெயக்குமாரின் அன்பு மனைவியும், கிருத்திக்கின் அன்புத் தாயாரும் சஜித்காந்த், மஜித்பிரியா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 591, காலி வீதி, கல்கிஸை எனும் விலாசத்தில் அமைந்துள்ள மஹிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று 04.05.2022 மாலை 04 மணிக்கு இறுதிக்கிரியைகள் இடம்பெற்று கல்கிஸை பொதுமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:

ஜெ. சஜித்காந்த் (சகோதரன்)

தொடர்பு: 0742786044


# காத்தான்குடி கடற்கரையில் பெண்ணொருவரின் இரண்டரை பவுண் தங்கச் சங்கிலி கொள்ளை

## சந்தேக நபர் கைது

(கனகராசா சரவணன்)

காத்தான்குடி கடற்கரையில் பொழுதை கழித்துக்கொண்டிருந்த வைத்தியர் ஒருவரின் தாயாரது கழுத்தில் இருந்த 4 இலட்சம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை அறுத்தெடுத்துச் சென்ற 23 வயதுடைய இளைஞனை நேற்று முன்தினம் (02) இரவு கைதுசெய்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் (02) இரவு பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி உதவிப் பொலிஸ் உத்தியோகத்தர் வை.விஜயராஜ் தலைமையிலான பொலிஸார் வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

இதன்போது சந்தேகத்துக்கிடமான நிலையில், வீதியால் பயணித்த இளைஞனை மறித்து சோதனையிட்டனர். இதன்போது அவனின் சட்டைப்பையில் இரண்டரைப் பவுண்கொண்ட தங்கச் சங்கிலியைக் கண்டுபிடித்து விசாரணை செய்தபோது குறித்த இளைஞன் தடுமாறியதுடன், அவனை விசாரணைக்காக கைதுசெய்து பொலிஸ் நிலையத்துக்கு கொண்டுசென்றனர்.

இந்நிலையில், காத்தான்குடி வைத்தியசாலையில் கடமையாற்றிவரும் ராகம பிரதேசத்தைச் சேர்ந்த வைத்தியர் ஒருவரின் தாயார் வைத்தியரை பார்ப்பதற்காக காத்தான்குடிக்கு வந்த நிலையில், வைத்தியரும் தாயாரும் சம்பவதினத்தன்று இரவு காத்தான்குடி கடற்கரையில் பொழுதை கழிப்பதற்கு சென்றுள்ளனர். இதன்போது தாயாரை கடற்கரையில் அமர வைத்துவிட்டு, வைத்தியர் கடைக்குச் சென்றுள்ளார்.

அப்போது அங்கு சென்ற இளைஞன் அவரின் கழுத்தில் இருந்த 4 இலட்சம் ரூபா பெறுமதியான 2 அரைப் பவுண் தங்கச் சங்கிலியை அறுத்தெடுத்துக் கொண்டு தப்பி ஓடியுள்ளான்.

இது தொடர்பாக முறைப்பாடுசெய்ய வைத்தியரும் தாயாரும் பொலிஸ் நிலையம் சென்ற நிலையில், வீதியில் வைத்து கைதுசெய்யப்பட்ட இளைஞனையும் அவனிடமிருந்து மீட்கப்பட்ட சங்கிலியையும் அவர்களிடம் காட்டியபோது அவர்கள் கொள்ளையனை அடையாளம் காட்டியதுடன், பறிகொடுத்த சங்கிலியை யும் அடையாளம் காட்டியுள்ளனர்.

இதில் கைதுசெய்யப்பட்ட இளைஞன் மதுபோதைக்கு அடிமையாகியுள்ளான் எனவும் இவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, மே 04ஆம் திகதி, புதன்கிழமை

# நாடு படும்பாடு!

நாடு மிக மோசமான நெருக்கடி நிலைமையை எதிர்கொண்டுள்ளது. பொருட்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றன.

எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு தீரவில்லை. பொருளாதார சுமைக்கு மத்தியில் மக்கள் பெரும் இன்னல்களை அனுபவித்து வருகிறார்கள்.

இந்நிலையில், நாடு பெரும் சுகாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளது. அரச வைத்தியசாலைகளில் உயிர்காக்கும் மருந்துவகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. தனியார் வைத்தியசாலைகளில் சத்திர சிகிச்சைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

நாட்டில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவும் என மூன்று மாதங்களுக்கு முன்னரே மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்திருந்தனர். எனினும், அப்போது அரசாங்கம் அதனைப் பொருட்படுத்தவில்லை.

சுகாதார நெருக்கடி தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுகாதார அமைச்சுக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தது. அது தொடர்பில் உடனடியாகக் கலந்துரையாடல் அவசியம் எனவும் கோரியிருந்தது. எனினும், சுகாதார அமைச்சரோ, உயர்மட்ட அதிகாரிகளோ அதனைக் கண்டுகொள்ளவில்லை.

இதேவேளை, நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையையடுத்து, இரு மாதங்களில் ஐந்நூறுக்கும் அதிகளவான மருந்து வகைகளின் விலையை 69 சதவீதத்தால் அதிகரிக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக அரச மருந்தாளர்கள் சங்கத் தலைவர் அஜித் திலகரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த மருந்து வகைகளின் விலைகள் கடந்த மார்ச் மாதத்தில் 29 சதவீதத்தாலும், ஏப்ரல் மாதத்தில் 40 சதவீதத்தாலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

பல்வேறு வர்த்தக நாமங்களில் விற்பனை செய்யப்படும் 60 வகையான மருந்துகளின் விலைகள் தொடர்பான வர்த்தமானி சுகாதார அமைச்சினால் கடந்த 30 ஆம் திகதி வெளியிடப்பட்டதையடுத்து, சந்தைகளில் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள 500 இற்கும் அதிகளவான வர்த்தக நாமங்களில் விற்பனை செய்யப்படும் மருந்து வகைகளின் விலைகள் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று, விலை நிர்ணயத்துக்கு உட்படாத மருந்துகளின் விலைகள் கடந்த இரு மாதங்களில் நூற்றுக்கு 69 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளன. அமெரிக்க டொலரின் பெறுமதி அதிகரிக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மருந்துகளின் விலைகளை அதிகரிக்க வேண்டியநிலை சுகாதார அமைச்சுக்கு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில், மருந்துகளின் விலை அதிகரிக்கப்படுவதால் நோயாளர்கள் கடுமையாக பாதிக்கப்படுவதுடன், மருந்துகளை உற்பத்தி செய்தல், விநியோகித்தல் என சகல மருந்துசார் தொழில்துறைகளும் எதிர்காலத்தில் கடுமையாக வீழ்ச்சியை சந்திப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன.

இது தொடர்பில் உடனடியாக கவனம் செலுத்தி மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்காவிட்டால், எதிர்காலத்தில் மக்களின் சுகாதாரப் பிரச்சினைகள் பாரதூரமான எச்சரிக்கை நிலைக்குத் தள்ளப்படுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மருந்து வகைகளுக்கு அரசாங்கம் நிர்ணய விலையை அறிவித்திருந்தாலும், அதனையும் மீறி மருந்தகங்களில் விற்பனை செய்யப்படுகின்றன. இதனை நுகர்வோர் விவகார அதிகார சபையினரால் கட்டுப்படுத்த முடியவில்லை.

ஒருபுறம் அத்தியாவசியப் பொருட்களுக்காக வரிசையில் பொதுமக்கள் நிற்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளதுடன், மறுபுறம் உயிர்காக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

மருந்துவகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் என நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்தும் கூட அரசாங்கத்தினால் முன்னேற்பாடுகள் எதனையும் செய்யமுடியவில்லை. ஆட்சியாளர்களின் இயலாமை இந்த விடயத்திலிருந்து வெளிப்படுகிறது.

மக்களைக் காப்பாற்றுவோம், சுபீட்சத்தை ஏற்படுத்துவோம் என உறுதியளித்தவர்களால் மக்கள் நடுவீதிக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்தவர் நாட்டைப் பாதுகாப்பார் என பெரும்பான்மை சிங்களவர்களால் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷ, தோல்வியடைந்த தலைவராகவே பார்க்கப்படுகிறார். முறையான நிர்வாகம் தெரியாதவரால் இந்த நிலைமைக்குத் தள்ளப்பட்டோம் என வாக்களித்த மக்களே இன்று சாபமிடுகின்றனர்.

தற்போதைய சூழ்நிலைகளைப் பார்க்கும்போது நாடு இன்னும் பாதாளத்துக்குச் செல்லும் என்பதை சாதாரண பொதுமகனால்கூட உணரக்கூடியதாக இருக்கிறது. இவ்விடயம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்கும் புரியாமலில்லை. இயலாமையுடைய தலைவர்களை தெரிவுசெய்ததன் விளைவை இன்று முழு நாடும் அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

# அமைச்சரவைத் தீர்மானங்கள்




### 01. நெதுன்கமுவ ராஜா தந்தயானையை தேசிய உடைமையாக பிரகடனப்படுத்தல்

நாட்டில் பிரதான வணக்கஸ்தலங்கள் பலவற்றில் பெரஹரா உற்சவங்களில் கலந்துகொண்டுள்ளதும், 2005 தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரை 13 தடவைகள் ஸ்ரீ தலதா மாளிகை பெரஹராவின் புனித பேழையைத் தாங்கி உற்சவ வீதி உலா சென்றதுமான தந்தயானை நெதுன்கமுவ ராஜா 07.03.2022 அன்று உயிரிழந்துள்ளது. தற்போது குறித்த தந்தயானையின் இறந்த உடலைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எமது நாட்டின் கலாசார வைபவங்களில் வழங்கிய ஒத்துழைப்புகளை கருத்தில் கொண்டு நெதுன்கமுவ ராஜா எனும் தந்தயானையை தேசிய உடைமையாக பிரகடனப்படுத்துவதற்காக புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 02. கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் முதலாவது முனையத்தால் வெளியேறும் பயணிகளுக்கான டிஜிட்டல் நுழைவாயில் முறைமையை நடைமுறைப்படுத்தல்

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக மேம்படுத்தல்கள் சிலவற்றை மேற்கொள்வதற்கு விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி திட்டமிட்டுள்ளது. அதன்கீழ் சர்வதேச விமானப் போக்குவரத்து சங்கத்தின் ஓர் அடையாள அட்டை (One ID) எனும் எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்டு, முதலாவது முனையத்தின் ஊடாக வெளியேறும் பயணிகளுக்கான டிஜிட்டல் நுழைவாயிலை அறிமுகப்படுத்தும் முன்னோடி கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதற்கமைய, வெளியேறும் முனையத்திற்கான உள்நுழையும் வாயிலில் இலத்திரனியல் கதவு அடையாளத்தைக் கண்டறியும் இயந்திரம் (Electronic gate / Face recognition machines) பொருத்தப்பட்டு, பயணிகளின் அடையாளத்திற்காக செல்லுபடியாகும் இலத்திரனியல் உள்நுழைவு அனுமதிச்சீட்டு தன்னகத்தே வைத்திருப்பதை உறுதிப்படுத்திக் கொள்வதன் மூலம் இலகுவாக பயணிகள் பரிசோதனைகளைப் பூர்த்தி செய்வதற்கான இயலுமை கிட்டும். சுற்றுலாத்துறை அமைச்சர் சமர்ப்பித்த குறித்த யோசனைக்கமைய அதற்கான முன்னோடிக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 03. 1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளை நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்

2022 மார்ச் மாதம் 10 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் தெரிவுசெய்யப்பட்ட அத்தியாவசியமற்ற மற்றும் அவசரமற்றதுமான பொருட்களின் இறக்குமதிக் கட்டுப்பாட்டை மேற்கொள்வதற்காக 1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 2022 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் ஒழுங்குவிதிகள் 09.04.2022 ஆம் திகதிய 2274/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. குறித்த ஒழுங்குவிதிகளின் அங்கீகாரத்திற்காக நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்காக நிதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 04. 1974ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்திருத்தம்

நீர் வழங்கல் துறையில் சமகால மற்றும் எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் 1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தைத் திருத்தம் செய்ய வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கான ஆரம்ப வரைபைத் தயாரிப்பதற்காக நீர்வழங்கல் அமைச்சின் செயலாளரின் தலைமையில் குழுவொன்றை நியமிப்பதற்காக 12.07.2021 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த குழுவால் தயாரிக்கப்பட்டுள்ள ஆரம்ப வரைபின் பிரகாரம் சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நீர்வழங்கல் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 05. 2021 ஆம் ஆண்டுக்கான இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

2021 ஆம் ஆண்டுக்கான இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை நாணய சபையால் 29.04.2022 ஆம் திகதி நிதி அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நாடாளுமன்ற அமர்வு இடம்பெறுமாயின், ஆண்டறிக்கை கிடைக்கப்பெற்று 14 நாட்களுக்குள் நிதி அமைச்சர் குறித்த ஆண்டறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தல் வேண்டும். அதற்கமைய, 2021 ஆம் ஆண்டு இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக நிதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 06. 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல்

பல்வேறு நிறுவனங்களால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகளைக் கருத்தில் கொண்டு சர்வதேச இணங்கியொழுகல்களுக்கு ஏற்புடைய பண்டங்களுக்கான வசதிகளை வழங்குவதற்காக புதிய தேசிய ஒத்திசைக்கப்பட்ட பொருட்களின் உபபிரிவுகள் மற்றும் இறக்குமதி முன்னுரிமை சுங்க குறியீடு (HS National Sub Divisions) வியாபார பண்டப் பிரிவுகள் சில புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன. அவ்வாறு உருவாக்கப்பட்டுள்ள சுங்கக் குறியீடுகள் 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 11.01.2022 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன. பின்னர், குறித்த புதிய இறக்குமதி முன்னுரிமை சுங்கக் குறியீடு, நிதி அமைச்சின் உடன்பாடுகளுடன் 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் வர்த்தக அமைச்சரால் கட்டளைகளாக வெளியிடப்பட்டுள்ளது. 11.01.2022ஆம் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள குறித்த கட்டளைகளின் நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கு வர்த்தக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 07. நாட்டில் தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடிகளால் சிரமங்களுக்குள்ளாகியுள்ள குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு உதவி வழங்கல்

நாட்டில் தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடிகளால் சமுர்த்தி, வயோதிப, சிறுநீரக மற்றும் வலுவிழந்தோர் கொடுப்பனவுகளைப் பெறும் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அக்கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக காத்திருப்புப் பட்டியலிலுள்ள குடும்பங்களுக்கு துரிதமாக உதவி வழங்க வேண்டிய தேவையை அரசாங்கம் அடையாளம் கண்டுள்ளது. உலக வங்கிக் குழும நிதியின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கருத்திட்டமான குறிப்பீடற்ற துரித பதிலளிப்புப் பிரிவின் மூலம் அதற்கான நிதி வழங்குவதற்கு உடன்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது. அதற்கமைய, அடையாளம் காணப்பட்ட பயனாளிக் குடும்பங்களுக்கு மே மாதம் தொடக்கம் ஜூலை மாதம் வரை குறித்த உதவிகளை வழங்குவதற்கான விசேட கொடுப்பனவு நடவடிக்கைகள் தொடர்பாக நிதி அமைச்சர் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 08. சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளைக் கொள்வனவு செய்வதற்கான பெறுகையை வழங்கல்

இந்திய ஏற்றுமதி - இறக்குமதி வங்கியின் ஒத்துழைப்பின் அடிப்படையில் கிடைக்கப்பெற்றுள்ள 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் வசதியின் கீழ் டீசல் மற்றும் பெற்றோல் கொள்வனவு செய்வதற்கான 04 பெறுகைகளுக்காக விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. அதற்கமைய, அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள விசேட நிரந்தரப் பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய குறித்த பெறுகையை வரையறுக்கப்பட்ட இந்தியன் ஓயில் கூட்டுத்தாபனத்திற்கு வழங்குவது தொடர்பாக எரிசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை உடன்பாடு தெரிவிப்பதற்கு தீர்மானித்துள்ளது.

### 09. வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவை உபகுழுவொன்றை நியமித்தல்

வாழ்க்கைச் செலவை நிலையான வகையில் பேணிச் செல்வதற்குத் தேவையான கொள்கை ரீதியானதும், நடைமுறை ரீதியானதுமான தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக ஜனாதிபதியின் தலைமையில், பிரதமர், ஏனைய ஏற்புடைய அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களின் பங்கேற்புடன் வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவை உபகுழுவை நியமிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

### 10. துரித முதலீட்டு வாய்ப்புக்களை அடையாளம் காணல்

நாட்டில் தற்போது நிலவுகின்ற வெளிநாட்டு செலாவணி நெருக்கடிக்குத் தீர்வாக துரிதமாக வெளிநாட்டு முதலீடுகளைக் கவர்ந்திழுக்கக் கூடிய வகையிலான முதலீட்டு வாய்ப்புகளை அடையாளம் காண்பதற்காக கீழ்வரும் அமைச்சர்களுடன் கூடிய குழுவொன்றை நியமிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

**(கலாநிதி) நாலக கொடஹேவா,**
வெகுசன ஊடக அமைச்சர் - தலைவர்
**திலும் அமுனுகம**
போக்குவரத்து மற்றும் கைத்தொழில் அமைச்சர்
**காஞ்சன விஜேசேகர ,**
எரிசக்தி அமைச்சர் மற்றும் மின்வலு அமைச்சர்
**பிரமித்த பண்டார தென்னகோன் ,**
துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர்
**லொஹான் ரத்வத்த ,**
நகர அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

### 11. புதிய அரசியலமைப்பு வரைபை தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள விசேட நிபுணத்துவக்குழு அறிக்கை

புதிய அரசியலமைப்பு வரைபை தயாரிப்பதற்காக ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் த சில்வாவின் தலைமையில் சட்டத்துறை நிபுணர்கள் அடங்கிய குழுவொன்றை நியமிப்பதற்கு 09.09.2020 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய, இக்குழுவின் ஆரம்ப அறிக்கை 25.04.2022 அன்று ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. குறித்த அறிக்கையில் உள்ளடங்கியுள்ள விடயங்களை ஆராய்ந்து, உகந்த பரிந்துரைகளை அமைச்சரவைக்கு முன்வைப்பதற்காக கீழ்க்காணும் அமைச்சர்களுடன் கூடிய உபகுழுவொன்றை நியமிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

**(பேராசிரியர்) ஜீ.எல்.பீரிஸ்**
வெளிவிவகார அமைச்சர் - (தலைவர்)
**தினேஷ் குணவர்த்தன**
அரச பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்
**டக்ளஸ் தேவானந்தா**
கடற்றொழில் அமைச்சர்
**(வைத்தியர்) ரமேஷ் பத்திரண**
கல்வி அமைச்சர் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்
**அலி சப்ரி**
நிதி அமைச்சர் மற்றும் நீதி அமைச்சர்

★★★★

## இன்றைய நாளில்...

- 1814 – எஸ்பானியா முழுமையான முடியாட்சிக்கு மாறியது.
- 1930 – மகாத்மா காந்தி கைதுசெய்யப்பட்டு யெராவ்தா மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.
- 1953 – ஏர்னெஸ்ட் ஹெமிங்வே 'கிழவனும் கடலும்' என்ற புதினத்துக்காக புலிட்சர் பரிசு பெற்றார்.
- 1959 – முதலாவது கிராமி விருது வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.
- 1990 – லாத்வியா சோவியத் ஒன்றியத்தின் ஆக்கிரமிப்புக்கு எதிராக மீண்டும் விடுதலையை அறிவித்தது.



# ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் உண்மைக்குப் புறம்பானவற்றை கூறினர்

## கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் குற்றச்சாட்டு

**(கனகராசா சரவணன்)**

கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற்கற்கை நிறுவகத்தில் கடந்த 20ஆம் திகதி அன்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாணவர்கள் உண்மைக்கு புறம்பாக ஊடகங்களில் வெளிப்படுத்தியுள்ளதுடன் சுவாமி விபுலானந்தா அழகியற்கற்கை நிறுவகத்துக்கு களங்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் கலாநிதி வி.கனகசிங்கம் தெரிவித்தார்.

சுவாமி விபுலானந்தா அழகியற்கற்கை நிறுவகத்தில் இடம்பெற்று ஆர்ப்பாட்டம் தொடர்பாக நேற்று முன்தினம் 02ஆம் திகதி துணைவேந்தர் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

சுவாமி விபுலானந்தா அழகியற்கற்கை நிறுவகத்தில் இடம்பெற்ற பகிடிவதை, வன்முறைகள், மற்றும் சொத்துகளுக்கு சேதம் விளைவித்தல் தொடர்பாக விசாரணைக்குழுவினால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதில் மாணவர்களின் பயன்பாட்டுக்காக ஆண்கள் விடுதியில் இருந்த தொலைக்காட்சி பெட்டி உடைக்கப்பட்டமை, இதனை உடைத்த மாணவர்கள் உடைக்கப்பட்ட தொலைக்காட்சி பெட்டியின் பெறுமதி தொகையை சமமாக பிரித்துச் செலுத்துவதோடு குறிப்பிட்ட அந்த மாணவர்கள் தொடர்ந்து விடுதியில் தங்கியிருக்க தடைவிதிக்கப்பட்து.

அத்துடன் பகிடிவதையினை ஊக்குவித்தமை மற்றும் துணையாக செயற்பட்டமை காரணமாக நான்காம் ஆண்டு மாணவர் ஒருவரின் வழிநடத்தலில் பகிடிவதை நடவடிக்கைகளுக்காக துணைபோகுமாறு முதலாம் ஆண்டு மாணவர்களை கட்டாயப்படுத்திய முதலாம் வருட மாணவர் மற்றும் நான்காம் வருட மாணவர் ஆகியோருக்கு 3 வார காலத்துக்கு நிர்வாகத்துக்குள் உள் நுழைவதற்கு தடைவிதிக்கப்பட்டது.

அதேவேளை, பகிடிவதை மேற்கொண்டமை தொடர்பாக நான்காம் ஆண்டு மாணவர் ஒருவர் பகிடிவதை என்ற பெயரில் முதலாம் ஆண்டு மாணவரை தாக்கியதன் காரணமாக நிர்வாகத்துக்குள் உள் நுழைவதற்கு தடைவிதிக்கப்பட்டது.

இந்த விடயங்கள் குறித்து அறிந்த மாணவர் ஒன்றியம் ஒழுக்காற்று அறிவிக்கப்பட்ட 29-4-2022 அன்று மாணவர்களை ஒன்று திரட்டி மேற்படி ஒழுக்காற்றை வாபஸ் பெறுமாறும் குறிப்பிட்ட மாணவர்களை நிர்வாகத்துக்குள் அனுமதிக்குமாறும் நிபந்தனைகளை முன்வைத்து பணிப்பாளர் அலுவலகத்தை முற்றுகையிட்டு கோஷம் எழுப்பினர்.

இது தொடர்பாக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகளை அழைத்து துறைத்தலைவர்கள், சிரேஷ்ட மாணவர் ஆலோசகர் மற்றும் மாணவர் ஒன்றிய பொருளாளர் போன்ற குழுவினை உள்ளடக்கிய குழுவினரிடம் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்த சமயம் காரியாலயத்துக்கு வெளியில் பகிடிவதைக்கு ஒத்துழைக்காத காரணத்தினால் முதலாம் தர மாணவர்கள் சிலர் சிரேஷ்ட மாணவர்களால் பாரதூரமாக தாக்கப்பட்டனர்.

அதனை தடுக்க முற்பட்ட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சீவரெத்தினம் நான்காம் வருட மாணவர்களின் தாக்குதலுக்கு உள்ளானதோடு அவரது கையடக்க தொலைபேசியும் பறித்து உடைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து பணிப்பாளர், விரிவுரையாளர்கள் உட்பட 10 பேரை இரவு 12 மணிவரை வெளியில் செல்லாதவாறு காரியாலயத்தில் வைத்து பூட்டியுள்ளனர்.

மாணவர்களால் இழைக்கப்பட்ட நீதிக்கு புறம்பான வன்முறையினை மூடிமறைத்து தங்களுக்கு அனுதாபத்தை தேடிக் கொள்வதற்காக விரிவுரையாளர் ஒருவரால் தாக்கப்பட்டதாக விரிவுரையாளரை தாக்கிய மாணவர்களே உண்மைக்கு புறம்பான தகவல்களை ஊடகங்களுக்கு கூறியதுடன் தங்களை வைத்தியசாலையிலும் அனுமதித்துக் கொண்டனர்.

இந்த விடயம் தொடர்பாக கடந்த முதலாம் திகதி கல்விசார் அவைக்குழு மற்றும் முகாமைத்துவசபை என்பன நடந்தேறிய விரும்பத்தகாத செயல்களை நுட்பமாக பரிசீலனை செய்து மாணவர்களின் வன்முறை நடவடிக்கைகளை கண்டித்ததுடன் நிர்வாகத்தில் சுமுகமான சூழலையும் விரிவுரையாளர்களின் பாதுகாப்பையும் கருத்தில்கொண்டு 3-5-2022 காலை எட்டு மணிக்குள் நிறுவகத்தில் இருந்து அனைத்து மாணவர்களும் வெளியேறுவதோடு மறு அறிவித்தல் வரை அவர்கள் உட்பிரவேசிக்க முடியாது எனவும், பல்கலைக்கழக கல்விசார் உறுப்பினர்களை உள்ளடக்காத சுதந்திரமான விசாரணைக்குழு ஒன்றை அமைக்கப்பட்டும், மேற்படி விசாரணைக்குழுவின் அறிக்கை ஒரு மாத காலத்துக்குள் முகாமைத்துவ சபைக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் விசாரணைக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தவறிழைத்தவர்களுக்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டது என அந்த ஊடக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# பா.ஜ.க. மாநிலத் தலைவர் திருக்கேதீஸ்வரத்தில் வழிபாடு





**(மன்னார் நகர் செய்தியாளர்)**

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு வருகை தந்திருந்த பாரதிய ஜனதா கட்சியின் தமிழ் நாடு மாநிலத் தலைவர் கே. அண்ணாமலை நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு வருகை தந்தார்.

அவர் உள்ளிட்ட குழுவினர் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் பூஜை வழிபாட்டில் ஈடுபட்டனர்.

அதனைத்தொடர்ந்து இந்திய அரசின் நிதி உதவியுடன் புனரமைக்கப்பட்டு வரும் திருக்கேதீஸ்வர ஆலய கட்டுமானப் பணிகளை பார்வையிட்டதோடு, திருக்கேதீஸ்வர ஆலய நிர்வாகத்தினருடன் கலந்துரையாடினார்.

இதன்போது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் தலைவர் செந்தில் தொண்டமான் மற்றும் குழுவினர் விஜயம் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஸக்காத் நிதிய உப பொருளாளரின் மறைவுக்கு கல்முனை முதல்வர் றகீப் அனுதாபம்

**(சாய்ந்தமருது நிருபர்)**

கல்முனை பைத்துஸ் ஸக்காத் நிதியத்தின் உப பொருளாளரும் பிரபல வர்த்தகருமான முஹம்மட் ஹாரூனின் திடீர் மறைவுச் செய்தியறிந்து அதிர்ச்சியும் ஆழ்ந்த துக்கமும் அடைந்துள்ளேன். அன்னாரது மறைவு கல்முனை மாநகருக்கு பேரிழப்பாகும் என்று கல்முனை முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது,

நான் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக ஒரு வாடிக்கையாளர் என்ற ரீதியில் அன்னாருடன் மிகவும் நெருக்கமாக பழகி வந்துள்ளேன். எனது நீண்ட கால உறவுக்குச் சொந்தக்காரர். எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகக்கூடியவர். சமூக சேவைகளிலும் மிகவும் அக்கறையுடன் கூடிய ஈடுபாடு காட்டி வந்திருக்கிறார். ஏழைகளுக்கு உதவும் நல்லெண்ணம் கொண்டவர். அதனால் பைத்துஸ் ஸக்காத் அமைப்பிலும் அங்கம் வகித்து, முக்கிய பொறுப்பை வகித்து வந்திருக்கிறார்.

சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டிருந்த நண்பர் ஹாரூன், அதற்கான மருத்துவங்களை மேற்கொண்டு வந்திருந்தார். அப்போதெல்லாம் நாங்கள் ஆறுதலையும் தெம்பையும் வழங்கி வந்தோம். இந்நிலையில் அவரது திடீர் மறைவானது எமது கல்முனை மாநகருக்கு பேரிழப்பாக அமைந்திருக்கிறது. ரமழான் மாதத்தின் ஒரு புனிதமான தினத்தில் அவரை இறைவன் தன்னகத்தே அழைத்திருக்கிறான்.

அன்னாரது மறைவினால் துயருற்றிருக்கும் மனைவி, பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறேன். வல்ல இறைவன் அன்னாருக்கு ஜன்னத்துல் பிர்தௌஸ் எனும் மேலான சுவர்க்கத்தை வழங்க பிரார்த்திக்கிறேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.













நோன்புப் பெருநாளை முன்னிட்டு கொழும்பு காலி முகத்திடலில் முஸ்லிம்கள் நேற்று தொழுகையில் ஈடுபட்டிருந்ததை படங்களில் காணலாம். (படப்பிடிப்பு: லலித் பெரேரா)




# சிறைக்கைதிகள், அதிகாரிகளுக்கு இஸ்லாமிய பாரம்பரிய உணவு

## அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையால் வழங்கிவைப்பு



**(இக்பால் அலி)**

அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையினால் நோன்பு பெருநாள் தினத்தில் கொழும்பு ரிமான்ட் சிறைச்சாலையில் உள்ள கைதிகள் அனைவருக்கும் இஸ்லாமிய கலாசார பாரம்பரிய பகல் உணவு வழங்கி வைக்கும் நிகழ்வு அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசிய தலைவர் சஹீட் எம். ரிஸ்மி தலைமையில் இடம்பெற்றது.

தடுப்புக் காவலிலுள்ள முஸ்லிம் சிறைக் கைதிகளுடன் ஏனைய சிறைச் கைதிகள் ஆயிரத்து 400 பேருக்கும் மற்றும் பாதுகாப்புக் கடமையிலுள்ள அதிகாரிகள் 200 பேர் உள்ளிட்ட மொத்தமாக ஆயிரத்து 600 பேருக்கான நோன்புப் பெருநாள் விசேட இஸ்லாமிய கலாசார பாரம்பரிய பகல் உணவு நேற்று வழங்கி வைக்கப்பட்டது. அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் முன்னாள் தலைவர் கே. என். டீன், பதில் செயலாளர் ஹாசிப் சுக்ரி, சிறைச்சாலையின் சமூக நலன்புரி அதிகாரி மகேஸ் உள்ளிட்டவர்கள் பங்கேற்றனர்.

# 30 வருடங்களுக்கு மேலாக இந்து ஆலயங்கள் பூட்டப்பட்டுள்ளமையால் உருவான சாபமே நாட்டின் இந்த நிலைமைக்குக் காரணம்

## சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் ஆறு திருமுருகன்

(யாழ். நிருபர்)

யாழ். காங்கேசன்துறையில் எவ்வித பூஜை வழிபாடுகளுமின்றி சுமார் 30 வருடங்களுக்கு மேலாக இந்து ஆலயங்கள் பூட்டப்பட்டுள்ளமையால் உருவான சாபமே தற்போது நாட்டைப் பாதித்துள்ளதாக சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் தெரிவித்துள்ளார்.



யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட இந்திய பாரதீய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநில தலைவர் அண்ணாமலையுடன், நல்லை ஆதீன குருமுதல்வர் சந்நிதானத்தில் சந்தித்து கலந்துரையாடியபோதே ஆறுதிருமுருகன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், காங்கேசன்துறை பகுதியில் மக்களின் காணிகளை பறித்து ஆடம்பர ஜனாதிபதி மாளிகை கட்டியுள்ளபோதும் மக்களை இன்னும் மீள்குடியேற்றம் செய்யவில்லை. ஆனால், அப்பகுதியில் காணப்படுகின்ற இந்து ஆலயங்கள் 30 வருடங்களுக்கும் மேலாக பூஜை வழிபாடுகளின்றி பூட்டப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

அதனுடைய சாபங்களே இன்றைய நாட்டின் நிலைமைக்குக் காரணமாகும்.

சடையம்மா மடம், விஷ்ணு கோயில் மற்றும் சிவன் கோயில் உட்பட அப்பகுதியில் பல இந்து ஆலயங்கள் இருக்கின்ற நிலையில் ஆட்சியாளர்கள் அதனை விடுவித்து பூஜை வழிபாடுகள் இடம்பெற அனுமதிக்க வேண்டும்.

நாங்கள் எவ்வித அரசியல் கட்சியையும் சார்ந்தவர்கள் அல்ல. மதத்தலைவர்கள் என்ற ரீதியில் மக்களுடைய பிரச்சினைகளை தெளிவாக எடுத்துரைக்கிறோம். பாரதப் பிரதமர் நரேந்திர மோடி தமிழ் மக்களின் தீர்வு விடயத்தில் அக்கறையாக உள்ள நிலையில், அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் தமிழ் மக்களுக்குரிய தீர்வும் காணப்பட வேண்டும் – என்றார்.

# யாழில் இடம்பெற்ற பெருநாள் தொழுகை







(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் முஸ்லிம்களின் ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் தொழுகை யாழ் மர்யம் ஜும்ஆ பள்ளிவாசலின் ஏற்பாட்டில் நேற்று (03) காலை 6.45 மணியளவில் ''நபிவழியில் நம் தொழுகை'' எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரி ஜின்னா மைதானத்தில் இடம்பெற்றது.

நோன்புப் பெருநாள் தொழுகை மற்றும் பெருநாள் குத்பா பிரசங்கம் என்பன மௌலவி எம்.ஏ. பைசரினால் (மதனி) நிகழ்த்தப்பட்டது.

மேற்படி பெருநாள் திடல் தொழுகையில் யாழ். வாழ் முஸ்லிம்கள், தாய்மார்கள், இளைஞர்கள், யுவதிகள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சாவகச்சேரி விபத்தில் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் பலி

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி நகரை அண்மித்த பகுதியில் ஏ-9 வீதியில் நேற்று (03) அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற்ற விபத்தில் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியிருந்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து வந்த மோட்டார்சைக்கிளும் வவுனியாவிலிருந்து வந்த பிக்கப் வாகனமும் சாவகச்சேரி இலங்கை வங்கி முன்பாக ஒன்றோடு ஒன்று மோதியதில் மோட்டார்சைக்கிளில் கடமை முடித்து வீடு திரும்பிய சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் பலியாகியுள்ளார். ஏழாலையில் கடமையாற்றும் கச்சாய் வீதி கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த30 வயதான நிசாந்தன் என்ற இளம் உத்தியோகத்தரே இவ்வாறு பலியாகியுள்ளார். உயிரிழந்தவரது சடலம் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மன்னார் ஜும்மா பள்ளிவாசலில் இடம்பெற்ற புனித நோன்புப் பெருநாள் தொழுகை







(மன்னார் நகர் நிருபர்)

நாட்டின் பல பிரதேசங்களில் இஸ்லாமிய மக்கள் நேற்று (3) புனித நோன்புப் பெருநாளை கொண்டாடினர். அந்தவகையில், மன்னார் மாவட்டத்திலுள்ள இஸ்லாமிய மக்களும் நேற்று நோன்புப் பெருநாளை கொண்டாடினர்.

மன்னார் மூர்வீதி ஜும்மா பள்ளிவாசலில் நேற்று செவ்வாய்க்கிழமை (3) காலை 8 மணியளவில் பெருநாள் தொழுகைகள் இடம்பெற்றன.

காலை 7 மணிக்கு பெண்களுக்கும் காலை 8 மணியளவில் ஆண்களுக்கும் பெருநாள் தொழுகை இடம்பெற்றது.

குறித்த பெருநாள் தொழுகை மூர்வீதி ஜும்மா பள்ளிவாசலின் மௌலவி எம். அஸீம் தலைமையில் நடைபெற்றபோது நோன்புப் பெருநாளின் முக்கியத்துவம், அல்குர்ஆன் சமய நற்சிந்தனைகள் பற்றியும் இங்கு எடுத்துக் கூறப்பட்டது.

மேலும், மாவட்டத்திலுள்ள ஏனைய பள்ளிவாசல்களிலும் பெருநாள் தொழுகைகள் இடம்பெற்றதுடன், நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் மன்னார் மாவட்டத்திலுள்ள இஸ்லாமிய மக்கள் அமைதியான முறையில் நோன்பு பெருநாளை கொண்டாடினர்.

# பிரான்பற்று பகுதி வீடொன்றில் தீ விபத்து: மகாஜனா மாணவி உயிரிழப்பு!

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பு பிரான்பற்று பகுதியிலுள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற தீ விபத்தில் மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார். தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் க.பொ.த. சாதாரண தரத்தில் கற்கும் மாணவியான சுதன் சதுர்சியா (வயது 17) எனும் மாணவியே உயிரிழந்துள்ளார்.

குறித்த வீட்டில் தீ விபத்து ஏற்பட்டதை அறிந்த அயலவர்கள் வீட்டில் பரவிய தீயை அணைத்து மாணவியை அங்கிருந்து மீட்டு சங்கானை வைத்தியசாலைக்கு கொண்டுசென்றுள்ளனர்.

வைத்தியசாலையில் மாணவி ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என வைத்தியர்கள் அறிக்கையிட்டனர். சம்பவம் தொடர்பில் இளவாலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# மலையகத்தில் ரமழான் பண்டிகை நிகழ்வுகள்





(க.கிஷாந்தன், மனுர சுதத் செல்லஹேவா)

புனித ரமழான் பண்டிகை நேற்று (03) முஸ்லிம்களினால் கொண்டாடப்பட்டது. கடந்த 30 நாட்கள் நோன்பிருந்து முஸ்லிம்கள் புனித ரமழான் பண்டிகையை கொண்டாடினர். அந்தவகையில், மலையகத்திலும் ரமழான் பண்டிகை விசேட தொழுகையின் பின்னர் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது. ஹட்டன் நகரின் பிரதான ஜூம்மா பள்ளிவாசலில் மௌலவி ஷஜகான் தலைமையில் இடம்பெற்ற விசேட ரமழான் தொழுகையிலும், பிரார்த்தனைகளிலும் ஹட்டன் முஸ்லிம் வாழ் மக்கள் கலந்துகொண்டிருந்தனர். பின்னர் தமது பண்டிகையை முஸ்லிம் மக்கள் சந்தோஷமாக கொண்டாடியதை காணக்கூடியதாக இருந்தது.



(எம்.எஸ்.எம்.மசாஹிம்)

ஈதுல் பித்ர் பெருநாளை முஸ்லிம்கள் நேற்று(03) கொண்டாடினர். அதனை முன்னிட்டு மாத்தளை கொங்காவளை ஜும்மா பள்ளிவாசலில் பெருநாள் தொழுகையில் முஸ்லிம்கள் ஈடுபட்டிருந்ததை காணக்கூடியதாக இருந்தது. இதன்போது மௌலவி அஷ் செய்க் சப்ரின் கொத்பாவின் பிரசங்கமும் இடம்பெற்றது.



ஹட்டன் சதொச விற்பனை நிலையத்தில் அரிசியை சலுகை விலையில் பெறுவதற்காக வாடிக்கையாளர்கள் வரிசையில் நிற்பதை படத்தில் காணலாம். (மனுர சுதத் செல்லஹேவா)

# பெருந்தோட்டத் தொழிலாளர்களை ஊக்குவிக்க தவறியமையே டொலர் பிரச்சினைக்கு காரணம்

## இ.தொ.கா. தேசிய அமைப்பாளர் சக்திவேல்

(தலவாக்கலை நிருபர்)



இந்த நாட்டின் முதுகெலும்பாக இருந்து அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகின்ற பெருந்தோட்டத் தொழிலாளர்களை இந்த அரசாங்கம் ஊக்குவிக்க தவறிவிட்டமையினாலேயே தற்போதைய நிலைமை இந்த அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கிறது. மேலும், பெருந்தோட்டத்துறைக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தால் இன்று நாட்டில் டொலர் பிரச்சினை ஏற்பட்டிருக்காது என முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய அமைப்பாளருமான பி.சக்திவேல் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த அரசாங்கம் மட்டுமல்ல, இதற்கு முன்பிருந்த எல்லா அரசாங்கங்களும் பெருந்தோட்டத்துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. இதனாலேயே நாம் அந்நியச் செலாவணியை இழந்திருக்கின்றோம்.

1979ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கையில் மிக முக்கிய ஏற்றுமதி பொருளாக தேயிலை காணப்பட்டது.

உணவுகளையோ கனிய வளங்களையோ நாம் பெற வெளிநாடுகளில் கையேந்த தேவையில்லை. இவை எல்லாம் எமது நாட்டில் இருக்கின்றன.

இந்த நாட்டில் எல்லா வளங்களையும் நாம் பெற்று வாழக்கூடிய சூழல் இங்கு காணப்படுகின்றது. எமது நாட்டை கட்டியெழுப்ப சிறந்த தலைவர்கள் எவரும் இல்லை. ஒரு துறையில் நிபுணத்துவம் பெற்ற ஒருவருக்கு அத்துறையுடன் தொடர்பான பொறுப்புகள் வழங்கப்படுவதில்லை.

வேறொரு துறைசார்ந்த பொறுப்புகளை வழங்கினால் அவருக்கு அத்துறை சம்பந்தமாக என்ன தெரியும். இவ்வாறான செயற்பாடுகளே எமது நாட்டில் நடக்கின்றன. இதனாலேயே நாம் இவ்வாறான பொருளாதார பின்னடைவை சந்தித்து வருகின்றோம் என்றார்.

# நுவரெலியாவில் வெள்ளியன்று கவனயீர்ப்புப் போராட்டம்

(தலவாக்கலை நிருபர்)

ஆசிரியர் விடுதலை முன்னணி ஏனைய ஆசிரியர் தொழிற்சங்கங்களுடன் இணைந்து 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை நுவரெலியா மாவட்டத்தில் பல இடங்களில் அரசுக்கெதிராக கவனயீர்ப்புப் போராட்டங்களில் ஈடுபடவுள்ளதாக ஆசிரியர் விடுதலை முன்னணியின் செயலாளர் என்.டி.எஸ்.நாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும்தெரிவிக்கையில், அனைத்து ஆசிரியர்களும் ஒன்றிணைந்து எரிபொருள் விலையேற்றம், அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம் என்பவற்றைக் கண்டித்து இந்த மாபெரும் கவனயீர்ப்பு பேரணி மற்றும் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம்.

அந்த வகையில், அரசாங்கம் மக்களின் அத்தியாவசியப் பிரச்சினைகளுக்கு செவிசாய்க்கும் வரை எமது போராட்டங்கள் ஓய்வதில்லை என்றார்.

# தலவாக்கலையிலிருந்து நடைபயணம்

(பி.கேதீஷ் க.கிஷாந்தன், த.அசோக்குமார்)



கொழும்பு காலிமுகத்திடலில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் அரசாங்கத்திற்கு எதிரான தொடர்ச்சியான போராட்டத்திற்கு மேலும் வலுசேர்க்கும் வகையில் தலவாக்கலையைச் சேர்ந்த சசிகுமார் என்ற இளைஞன் 'கோட்டா கோ கோம்', 'தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை 3000ரூபாவாக உயர்த்து' போன்றவாசகங்களுடன் தலவாக்கலையிலிருந்து நேற்று (3) கொழும்பு காலிமுகத்திடலை நோக்கி நடைபயணத்தை ஆரம்பித்துள்ளார்.

தலவாக்கலையிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்நடைப் பயணமானது இரண்டு நாட் களில் சுமார் 140 கிலோமீற்றர் தூரம்வரை நடந்து சென்று காலி முகத்திடலில் முன்னெடுக்கப்படும் போராட்டத்திற்கு ஆதரவளிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

# சோபையிழந்த நுவரெலியா வசந்தகால கொண்டாட்டங்கள்







(நானுஓயா நிருபர்)

நுவரெலியா சித்திரைப் புத்தாண்டு வசந்த கால கொண்டாட்டங்கள் ஏப்ரல் 1ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 30ஆம் திகதி வரை கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அந்தவகையில் ஏப்ரல் 1ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்வுகள், சிறிது நேரத்தில் திடீரென புகுந்த குழுவினர், அரசாங்கத்திற்கு எதிராக கோஷமிட்டு தொடர்ந்து நிகழ்வுகளை நடத்தவிடாமல் இடையூறு விளைவித்தனர். அன்று முதல் இன்று வரை வசந்தகால கொண்டாட்டங்கள் மந்தநிலையிலேயே உள்ளன. சுற்றுலாப் பயணிகள் வருகை முற்றிலும் குறைவாக உள்ளமையால் புத்தாண்டையும், நுவரெலியா வசந்த காலத்தையும் நம்பி வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள் தற்போது கைவிடப்பட்ட நிலையில் இருப்பதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதிவாழ் மக்களில் 90வீதமானோர் சுற்றுலாத்துறையை நம்பியே வாழ்க்கை நடத்துகின்றனர். ஏப்ரல் மாத வசந்த காலத்தில்தான் நுவரெலியாவிலுள்ள அனைத்து சுற்றுலா விடுதிகள், வாடகை விடுதிகள், பழங்கள் மற்றும் மரக்கறி வியாபாரிகள், நகர வர்த்தகர்கள், நடை பாதை வியாபாரிகள், வாடகை வாகன சாரதிகள், குதிரை சவாரி தொழில் செய்பவர்கள் மற்றும் சுற்றுலா வழிகாட்டிகள் என அத்தனைத் துறைகளைச் சார்ந்தவர்களும் பணம் பார்க்கும் சந்தர்ப்பமே ஏப்ரல் சித்திரைப் புத்தாண்டு பருவகாலம் எனலாம்.

வழமைப்போல் இம்முறையும் மலர்க் கண்காட்சி, காணிவேல் களியாட்ட நிகழ்வுகள், இசை நிகழ்ச்சிகள் என தினசரி இருந்தபோதிலும் கடந்த வருடங்களைவிட இவ்வருடம் பெருந்தொகையான சுற்றுலாப் பயணிகள் வருகை தரவில்லை என வசந்தகால நிகழ்வு ஏற்பாட்டுக்குழு வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

எரிபொருள் விலையேற்றம் மற்றும் பற்றாக்குறை காரணமாக நீண்ட நேரம் வரிசையில் காத்திருக்க நேரிட்டுள்ளமை மற்றும் உணவுப்பொருட்களின் விலையேற்றம் காரணமாகவும் பெரும்பாலான பகுதிகளில் வீதிகளை மறித்து ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படுகின்றமை காரணமாகவே அதிகளவான சுற்றுலாப் பயணிகள் நுவரெலியாவிற்கு படையெடுக்காமல் இருக்கலாம் என நகர முதல்வர் தெரிவித்தார்.

# மூன்று நாட்களில் அரசாங்கம் பதவி விலகாவிட்டால் 11ஆம் திகதியிலிருந்து தொடர்ச்சியான ஹர்த்தால்!

## தொழிற்சங்க ஒருங்கிணைப்பு மத்திய நிலையம் அறிவிப்பு

அரசாங்கத்தை பதவி விலகக்கோரி நாளை மறுதினம் ஒருநாள் ஹர்த்தால் மற்றும் வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாகவும், அதற்கு அரசாங்கம் உரிய பதிலை வழங்காவிட்டால் அரசாங்கம் பதிவி விலகும் வரை எதிர்வரும் 11ஆம் திகதியிலிருந்து நாடு முழுவதும் தொடர்ச்சியான ஹர்த்தால் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தொழிற்சங்க ஒருங்கிணைப்பு மத்தியநிலையத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்காக, அரச மற்றும் சகல அரை அரசு தொழிற்சங்கங்கள் இந்த ஹர்த்தால் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கவுள்ளதாகவும் இந்த ஹர்த்தால் நடவடிக்கைக்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (02) தொழிற்சங்கங்கள், வெகுசன அமைப்புகள் மற்றும் பல்வேறு துறைசார் சங்கங்கள் என்பன இணைந்து இந்த தீர்மானத்தை எடுத்துள்ளன. இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

இந்த அரசாங்கத்தால் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை பெற்றுக்கொடுக்க முடியாது. செல்லுமாறு கூறியும் இந்த அரசாங்கத்துக்கு புரியாததால், அரசாங்கத்தை துரத்தியடிக்கவே நாங்கள் களத்தில் இறங்கவுள்ளோம்.

அவ்வாறு அரசாங்கம் பதவி விலகாவிட்டால் எதிர்வரும் 11ஆம் திகதியிலிருந்து தொடர்ச்சியான ஹர்த்தாலுக்கு தீர்மானித்துள்ளோம்.

நாளை மறுதினம் (06) நாடுதழுவிய ரீதியில் வேலைநிறுத்தப் போராட்டம் மற்றும் ஹர்த்தால் என்பவற்றை வெற்றிகரமாக முன்னெடுக்க தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட வெகுசன அமைப்புகள் மற்றும் பல்வேறு துறைசார் சங்கங்கள், சிவில் அமைப்புகள் என்பனவும் ஒத்துழைப்பு வழங்கவுள்ளன.

கடந்த ஜனவரி மாதம் 08ஆம் திகதியிலிருந்து அரசாங்கத்துக்கு எதிராக பல்வேறு தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தோம். அதற்கமைய, கடந்த கூட்டத்தின்போது ஏப்ரல் 28ஆம் திகதி வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்கவும் மே 06ஆம் திகதி ஹர்த்தாலை முன்னெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. 28ஆம் திகதி வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தோம். அது சாதகமான வேலைநிறுத்தப் போராட்டமாக அமைந்திருந்தது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

# ரஞ்சனின் விடுதலை தொடர்பில் ஜனாதிபதியிடம் கூறிப் பயனில்லை

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

ரஞ்சன் ராமநாயக்க ஒருபோதும் சிறையில் இருக்கவேண்டிய மனிதரல்ல எனவும், அவருக்கு நீதி பெற்றுத் தரப்படும் என ஜனாதிபதி பல தடவைகள் கூறியபோதிலும், இதுவரையில் ஏமாற்றமே வழங்கப்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அவரை விடுதலை செய்யுமாறு ஜனாதிபதியிடம் பலமுறை கோரிக்கை விடுத்தும் இதுவரையும் அந்த கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இனி ரஞ்சன் ராமநாயக்கவின் விடுதலை செய்யுமாறு கோருவதற்குப் பதிலாக அவரது விடுதலைக்கான போராட்டம் தீவிரப்படுத்தப்படும் எனவும் மேலும் தெரிவித்தார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ரஞ்சன் ராமநாயக்கவை நேற்று (03) காலை நேரில் சென்று பார்வையிட்டதன் பின்னரே எதிர்க்கட்சித் தலைவர் இதனைத் தெரிவித்தார்.







நாட்டில் எரிபொருள் பிரச்சினையை தீர்க்க ரஷ்யாவின் உதவியை நாடுமாறு கோரி கொழும்பிலுள்ள ரஷ்ய தூதரகத்துக்கு முன்னால் நேற்று (03) கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. (படப்பிடிப்பு: கிரிஷான் காரியவசம்)

# மத்திய கலாசார நிதியத்தின் புதிய இணையதளம் யூடியூப் சேனல் பிரதமரினால் அங்குரார்ப்பணம்



மத்திய கலாசார நிதியத்தின் புதிய இணையதளம் மற்றும் யூடியூப் சேனல் ஆகியன பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் நேற்று (03) அலரி மாளிகையில் வைத்து இணையத்தில் வெளியிடப்பட்டது.

தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் நாட்டின் கலாசாரம் தொடர்பில் பிரசாரம் செய்வதும், சுற்றுலாப் பயணிகளின் ஈர்ப்பை அதிகரிப்பதும் இதன் நோக்கமாகும்.

மத்திய கலாசார நிதியத்தின் புதிய இணையதளத்தை ccf.gov.lk இல் அணுகலாம் மற்றும் "எங்கள் பாரம்பரியம்" (Our heritage) ) என்ற புதிய யூடியூப் சேனலை அணுகலாம்.

மத்திய கலாசார நிதியம் இலங்கையின் கலாசார பாரம்பரியத்தை நிர்வகிக்கும் முன்னணி நிறுவனமாகும், மேலும் இலங்கையின் முக்கிய தொல்பொருள் தளங்களின் பாதுகாப்பு, ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல், சுவரோவியங்கள் மற்றும் பிற தொல்பொருட்களை பாதுகாத்தல் மற்றும் தொல்லியல் துறையில் மனித வளங்களை மேம்படுத்துதல் ஆகியவற்றில் முக்கிய பங்கு வகிக்கிறது.

இலங்கையின் கலாசார சுற்றுலாத்துறையை வழிநடத்தி இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு மத்திய கலாசார நிதியம் பங்களிப்பு செய்கிறது.

ஆரம்பத்தில் கலாசார முக்கோணத்தை அடிப்படையாகக்கொண்டு, இந்த நிறுவனம் ஆறு முக்கிய தொல்பொருள் தளங்களுடன் தொடங்கப்பட்டது மற்றும் அதன் பாரம்பரிய முகாமைத்துவ நடவடிக்கைகளை விரிவுபடுத்தி அதன் நடவடிக்கைகள் தீவின் பிற பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய, இதுவரை நாடளாவிய ரீதியில் 24 முக்கிய தொல்பொருள் தளங்களில் இந்த பாரம்பரியத்தை நிர்வகிப்பதற்கு மத்திய கலாசார நிதியம் பங்களித்து வருகிறது.

குறித்த சந்தர்ப்பத்தில் பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன, தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அனுர மனதுங்க, மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் காமினி ரணசிங்க, அதன் சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளர் உபுல் பண்டாரநாயக்க, ஊடகப் பணிப்பாளர் லலித் உதேச மதுபானு உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# புகையிரதத்தினூடான எரிபொருள் விநியோகத்தை மேலும் விரிவுபடுத்த அரசாங்கம் நடவடிக்கை




எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு விரைவாக எரிபொருளை பெற்றுக் கொடுப்பதற்காக, புகையிரதங்களினூடான எரிபொருள் விநியோகத்தை மேலும் விரிவுபடுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக புகையிரதத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில், நாளாந்தம் 05 மில்லியன் லீற்றர் எரிபொருளை விநியோகிக்கப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக புகையிரதத் திணைக்களத்தின் பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித் துள்ளார்.

தற்போது தினமும் 3.4 மில்லியன் லீற்றர் எரிபொருள் புகையிரதத்தினூடாக கொண்டுசெல்லப்படுகின்றது.

புகையிரத்தினூடான எரிபொருள் விநியோகத்தை அதிகரிப்பது தொடர்பான கலந்துரையாடல் போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகமவின் தலைமை யில் நேற்று (03) நடைபெற்றிருந்தது.

இதன்போது, தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு, எரிபொருள் விநியோகத்தில் காணப்படும் நடைமுறை பிரச்சினைகள் என்பன குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

# தமிழகம் செல்ல முயற்சித்த நால்வர் கைது!

தமிழகம் செல்ல முற்பட்ட வவுனியா வாசிகள் யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி பகுதியில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியாவை சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் நேற்று முன்தினம் (02) யாழ்ப்பாணம் வந்து அல்லைப்பிட்டி கடற்பகுதி ஊடாக இந்திய செல்ல முற்பட்டவேளை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நால்வரும் சட்ட நடவடிக்கைக்காக ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை இந்தியாவிற்கு அனுப்புவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்ட நபர்கள் தொடர்பிலான விசாரணைகளையும் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.





ஈகைத் திருநாளை முன்னிட்டு பேருவளை சியாலுஸ் சலீன் ஜும்மா பள்ளிவாசலில் நேற்று (03) விசேட ஆராதனைகள் இடம்பெற்றன. (படங்கள் - பீ.எம்.முக்தார்)





புனித ரமலான் நோன்புப் பெருநாள் உடப்பு இஸ்லாமிய மக்களால் மிகவும் சிறப்பாக நேற்று (3)கொண்டாடப்பட்டது.இதில் பலர் தொழுகையில் ஈடுபட்டனர். (படங்கள் - உடப்பு நிருபர்)







ஈதுல்பித்ர் நோன்புப் பெருநாள் விசேட தொழுகையும் குத்பா பிரசங்கமும் கொழும்பு பெரிய பள்ளிவாசலில் நேற்று இடம்பெற்றது. பள்ளிவாசல் பிரதம இமாம் மௌலவி எஸ்.எம்.றிஸ்வான் பஹ்ஜி தொழுகையையும் குத்பா பிரசங்கத்தையும் நடத்தினார். விசேட துஆப் பிரார்த்தனையை இந்தியாவைச் சேர்ந்த அஷ்-ஷெய்க் மொஹமட் பசீர் கோயா தங்கள் நிகழ்த்தினார்கள். (படங்கள் - ஏ.எஸ்.எம்.ஜாவித்)

திகதி 02.05.2022 திங்கட்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4750
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 7,912,710.00
ஆங்கில எழுத்து Z வெற்றி இலக்கங்கள் 6 2 9 9 6 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 18,889,998.00

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 780
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,167,760.00
வெற்றி இலக்கினம் O
வெற்றி இலக்கங்கள் 16 39 55 66
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 109,699,464.80

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0059
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 5,234,480.00
இலக்கினம் ரிஷபம்
வெற்றி இலக்கங்கள் 02 15 29 51
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 3,136,789.80

கோடி 25+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1098
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 4,775,900.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 250,191,066.00
V 11 07 22 28 60
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# மூன்று வருடங்களுக்குப் பிறகு திறந்தவெளியில் மருதமுனையில் நோன்புப் பெருநாள் தொழுகை





(அம்பாறை நிருபர்)

புனித நோன்புப் பெருநாள் தொழுகை அக்பர் ஜும்மா மஸ்ஜீத் ஏற்பாட்டில் 3 வருடங்களுக்குப் பின்னர் அம்பாறை மாவட்டம், மருதமுனை கடற்கரை திறந்தவெளியில் நேற்று (03) காலை 6.15 மணிக்கு நடைபெற்றது. இதன்போது கலாநிதி அஷ்செய்க் எம்.எல்.முபாறக் மதனி தொழுகை நடத்தி பிரசங்கமும் நிகழ்த்தினார். இதில் ஆண்களும் பெண்களும் கலந்துகொண்டனர்.

இதேவேளை, அம்பாறை மாவட்டத்தின் நற்பிட்டிமுனை, கல்முனை, சம்மாந்துறை, நிந்தவூர், அக்கரைப்பற்று, பொத்துவில் உள்ளிட்ட முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளிலும் பெருநாள் தொழுகைகள் பரவலாக இடம்பெற்றன.

3 வருடங்களுக்குப் பின்னர் மேற்படி பகுதிகளில் இடம்பெற்ற பெருநாள் தொழுகைகளில் பல்லாயிரக் கணக்காகன மக்கள் கலந்துகொண்டிருந்தனர்.

கடந்த காலங்களில் கொரோனா அச்சுறுத்தல் உட்பட இதர காரணங்களினால் பெருநாள் தொழுகை கட்டுப்பாடுகளுடன் நாடுபூராகவும் இடம்பெற்றிருந்தன. நேற்று (03) நாடளாவிய ரீதியில் இஸ்லாமியர்கள் தமது புனித நோன்புப் பெருநாள் பண்டிகையை 3 வருடங்களின் பின்னர் சிறப்பாக அனுஷ்டிக்கின்றனர்.

பெருநாள் தொழுகையை நிறைவேற்றிய பின் அனைவரும் தமது நோன்புப் பெருநாள் வாழ்த்துகளை தமது உறவுகளுக்கும் நண்பர் களுக்கும் தெரிவித்துக்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து தமது பெருநாள் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்ளும்முகமாக உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அயலவர் களின் வீடுகளுக்குச் சென்று பெருநாள் வாழ்த்துகளை தெரிவித்துக்கொண்டதோடு, உணவுப் பண்டங்களை பகிர்ந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனையில் கட்டாக்காலி மாடுகளால் அதிகரிக்கும் விபத்துச் சம்பவங்கள்



(பாண்டிருப்பு நிருபர்)

கல்முனை பிரதேசத்தில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக வீதியில் பயணிப்போர் விபத்துக்குள்ளாகி வருகின்றனர். கல்முனை மாநகர சபை இக்கட்டாக்காலி மாடுகளின் தொல்லையை இல்லாதொழிப்பதற்கு உறுதியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

அண்மைக்காலமாக கல்முனை நகர் பகுதி அதனை அண்டிய பிரதேசங்களிலும் கட்டாக்காலி மாடுகள் அங்கும் இங்குமாக நடமாடி வருகின்றன. வீதியின் நடுவில் படுத்துறங்குவதும், போக்குவரத்துக்கு இடைஞ்சலாக நிற்பதுமாக மாடுகள் அலைவதனால் வாகனங்களில் பயணிப்போர் மிகுந்த அசௌகரியங்களுக்கு உள்ளாவதுடன், விபத்துகளும் ஏற்படுகின்றன. அத்துடன், பாதையோரங்களில் பயணிக்கும் பாடசாலை மாணவர்கள், முதியோர்கள் இக்கட்டாக்காலி மாடுகளினால் ஆபத்துகளையும் சந்தித்து வருகின்றனர்.

கடந்த காலங்களிலும் கல்முனை மாநகர சபையினால் கட்டாக்காலி மாடுகளின் தொல்லையைக் கட்டுப்படுத்த பல்வேறு தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டபோதிலும் அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை என பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கல்முனை நகர் பகுதியில் நடமாடும் இக்கட்டாக்காலி மாடுகளை கட்டுப்படுத்த கல்முனை மாநகர சபை இறுக்கமான சட்டங்களை நடைமுறைப்படுத்துவதுடன். கால்நடை வளர்ப்பாளர்களுக்கு எதிராக கடும் சட்டநடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# புனித நோன்புப் பெருநாளை முன்னிட்டு உலருணவுப் பொதிகள் வழங்கிவைப்பு





(மாளிகைக்காடு நிருபர்)

அம்பாறை மாவட்டத்தின் பல பாகங்களுக்கும் கல்முனை கிளுகிளுப்பு சங்கத்தின் மூலம் பல மனிதநேயப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. அந்த வகையில் புனித நோன்புப் பெருநாளை முன்னிட்டு "எல்லோரும் கரமிணைந்து நாமிணைந்த பெருநாள் தினம்" எனும் வேலைத்திட்டத்துக்கமைவாக கல்முனை பிராந்தியத்தில் அடையாளப்படுத்தப்பட்ட விசேட தேவையுடையவர்கள், பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்கள், வருமானம் குறைந்தவர்களுக்கான உலருணவுப் பொதிகள் நேற்று (03) வழங்கப்பட்டன.

இந்நிகழ்வு தொடர்பில் கருத்து தெரிவித்த பிரதம செயற்பாட்டாளர் ஏ.எல்.ஆஸீர், இந்த நிவாரணப் பணிகளுக்கு உதவிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எமது சங்கத்தின் சார்பாக பிரார்த்தனையுடன் கூடிய நன்றிகளை தெரிவித்துக்கொள்வதாகவும் அல்லாஹ்வின் பொருத்தத்தை நாடி சமூகத்திற்கான எமது கிளுகிளுப்பு சங்கத்தின் பணி தொடரும் என்றும் தெரிவித்தார்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



ஏறக்குறய ஒருமாதமா காலிமுகத்திடலில "கோட்டா கோ ஹோம்" காணிவேல் நடக்குது ஆனா சிங்கள சனம் எப்படி தொண்ட கிழிய கத்தினாலும்.. கோட்டாவோ, மஹிந்தவோ போறமாதிரியும் இல்ல. 225, எம்பிமாரும் ஒன்றா சேர்ந்து ஒரு முடிவு எடுக்கிற மாதிரியும் இல்ல. இனி சிங்கள மக்கள் எல்லா எம்பிமாரையும் துரத்திற மாதிரி போராட்டத்த மாற்றுவதுதான் சரி எண்டுதான் எனக்கு படுது.. நான் சொல்லுறது சரி எலுவா?

# விபுலானந்தா அழகியற் கற்கை நிறுவக விடுதியிலிருந்து மாணவர்களை வெளியேறுமாறு நீதிமன்றம் தடையுத்தரவு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கை நிறுவகத்தின் மாணவர் ஒன்றிய தலைவர் வி.சுரேந்திரன் மற்றும் பிரபாத் ஆகியோருடன் இணைந்த அனைத்து மாணவர்களும் விடுதியிலிருந்து வெளிச்செல்லுமாறு நேற்று முன்தினம் (2) மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவு ஒன்றை பிறப்பித்து கட்டளையிட்டுள்ளது.

குறித்த பல்கலைக்கழகத்தில் முதலாம் திகதியிலிருந்து எதிர்வரும் 29ஆம் திகதிவரை விடுமுறை வழங்கப்பட்டுள்ள நிலையில், விடுதியிலிருந்து மாணவர்கள் வெளியேறுமாறு நிர்வாகம் அறிவித்தபோதும் மாணவர்கள் விடுதியிலிருந்து வெளியேறாமல் நேற்று முன்தினம் (01) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கை நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி ஜ.பி.கெனடி விடுதியிலிருந்து மாணவர்கள் வெளியேறாது மாணவ சங்கத் தலைவர் வி.சுரேந்திரன் மற்றும் பிரபாத் ஆகியோர் மாணவர்களை ஒருமித்து ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டு வருவதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவித்தார்.

இதனையடுத்து காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுமிந்த நயனசிறி குறித்த பல்கலைக்கழக நிறுவகத்தில் முதலாம் திகதி தொடக்கம் மறு அறிவித்தல் வரையில் நிறுவகத்தில் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அங்குள்ள விடுதியில் தங்கியிருக்கும் மாணவர்களை நேற்று காலை 8 மணி முதல் வெளியேறுமாறும் அறிவிக்கப்பட்ட நிலையில், விடுதியில் இருந்து மாணவர்கள் வெளியேறாது வெளியில் தங்கியிருக்கும் மாணவர்களை நிறுவக வளாகத்துக்குள் அழைத்து ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டுவருவதுடன், ஏதாவது குற்றச்செயலும் நடக்க வாய்ப்பு அதிகமாக இருப்பதாகவும் எனவே இதனை தடுத்து நிறுத்துவதற்காக குறித்த மாணவர் சங்கத் தலைவர் உட்பட அனைத்து மாணவர்களை வெளிச்செல்லுமாறு தடை உத்தரவு ஒன்றை கோரினர். தடையுத்தரவு பிறப்பிப்பதற்காக ஏதுக்கள் இருப்பதாக இம்மன்று திருப்திப்படுவதால் 1979ஆம் ஆண்டின் 15 இலக்க குற்றவியல் நடைமுறைச் சட்டகோவையின் பிரிவு 106 (1) கீழ் பொலிஸார் கோரியவாறு நீதவான் தடையுத்தரவு பிறப்பித்து கட்டளையிட்டார்.

இதேவேளை, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் இந்த நீதிமன்ற தடையுத்தரவையடுத்து அங்கிருந்து வெளியேறியமை குறிப்பிடத்தக்கது.

# கிண்ணியா தோனா கடற்கரை சிறுவர் பூங்காவில் புதிய விளையாட்டு உபகரணங்கள் பாவனைக்கு



(கிண்ணியா நிருபர்)

கிண்ணியா நகர சபையின் கீழ் உள்ள தோனா கடற்கரை சிறுவர் பூங்காவில் புதிய வகையான விளையாட்டு உபகரணங்கள் நேற்று முன்தினம் (02) அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டன.

கிண்ணியா நகர சபையின் தவிசாளர் எம்.எம்.நிவாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், மின்சார புகையிரத உபகரணம், வட்ட வடிவிலான சுற்றும் உபகரணம் என்பன அங்குரார்ப்பணம் செய்துவைத்து பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

UNDPயின் நிதி அனுசரணையில் சுமார் 80 இலட்சம் ரூபா செலவில் சிறுவர்களின் பொழுது போக்கிற்காக இது ஆரம்பிக்கப்பட்டது.

இதில் கிண்ணியா நகர சபையின் பிரதி தவிசாளர் ஐயூப் நளீம் சப்ரீன், செயலாளர் விஷ்ணு, நகர சபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# திடீரென மயங்கி விழுந்த இளைஞன் உயிரிழப்பு

## உப்புவெளியில் சம்பவம்

(திருகோணமலை நிருபர்)

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கன்னியா மாங்காய் ஊற்று பகுதியில் திடீரென மயங்கி விழுந்த இளைஞன் உயிரிழந்துள்ளதாக உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

திருகோணமலை பாலையூற்று பூம்புகார் பிரதேசத்தில் வசித்துவந்த கே.வசந்தன் (வயது-34) என்பவர் கன்னியா மாங்காய் ஊற்று பிரதேசத்திலுள்ள தனது காணியில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது மயங்கி விழுந்த நிலையில், வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும்போது உயிரிழந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளதாக உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்த நபர் நேற்று முன்தினம் (02) நண்பகல் வேளையில் வெயிலில் வேலை செய்துகொண்டிருக்கும்போது குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுகிறது.

மேலும் கடந்த சில நாட்களாக திருகோணமலையில் அதிக வெப்பநிலை யுடனான காலநிலை நிலவி வருகின்ற நிலையில், குறித்த நபர் வெயிலின் அகோரத்தில் மயங்கி விழுந்து உயிரிழந்திருக்கலாம் என சந்தேகம் வெளியிட்டுள்ளதுடன், தற்போது குறித்த நபரின் சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலையின பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனைக்குப் பின்னர் உறவினர்களுக்கு கையளிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும் குறித்த நபர் உயிரிழந் தமைக்கான காரணம் இதுவரை கண்டறியப் படாத நிலையில், மேலதிக விசாரணைகளை உப்புவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அரசுக்குச் சார்பாக இருந்துகொண்டு எமது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்

## இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தெரிவிப்பு



(கல்லடி நிருபர்)

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நாம் அரசுக்குச் சார்பாக இருந்துகொண்டு, எமது கடமைகளை நிறைவேற்றி, தனிநபர் வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - என கிராமிய வீதிகள் மற்றும் உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சரும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சராகப் பதவியேற்ற பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தின் பேத்தாழை பிரதேசத்திற்கு முதல் தடவையாக விஜயம் செய்து கல்குடா தொகுதியிலுள்ள கிராமிய வீதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பாக அப்பிரதேச மக்களுடனான கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இக்கலந்துரையாடல் கோறளைப்பற்று பிரதேச சபைத் தவிசாளர் திருமதி சோபா ரஞ்சித் தலைமையில் பேத்தாழை குகநேசன் கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் (02) இடம்பெற்றது.

அவர் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஆசியாவிலேயே சனத் தொகை குறைந்ததும், அரசாங்க அதிகாரிகள் அதிகம்கொண்ட நாடாகவும் இலங்கை காணப்படு கின்றது. இந்நிலையில், நாடு தருகின்ற நல்ல விடயங்களை அனுபவிக்கும் அதேவேளை, தீய விடயங்களையும் நாம் அனுபவித்தேயாக வேண்டும். உலக நாடுகள் பலவற்றிலும் பொருளாதாரப் பிரச்சினை ஏற்பட்டபோதிலும் அது எம்மை அதிகளவில் தாக்கியுள்ளது.

இவ்வாறான காலகட்டத்தில் எமது பிரதேசத்திலுள்ள கிராமிய வீதிகள் பலவற்றை எமக்குக்கிடைக்கும் நிதியின் அளவைப் பொறுத்து அபிவிருத்தி செய்யத் திட்டமிட்டுள்ளோம் - என்றார்.

இக்கலந்துரையாடலில் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளருமான பூபாலபிள்ளை பிரசாந்தன் உட்பட பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# குழாய்நீர் விநியோகத்தில் குடிநீர்க் கசிவு; துறைநீலாவணை பிரதேச மக்கள் விசனம்



(வெல்லாவெளி நிருபர்)

துறைநீலாவணை கிராமத்தில் காணப்படும் குழாய்நீர் விநியோகத்தில் குழாய்களில் கசிவுகள் காணப்படுவதாக துறைநீலாவணை கிராமத்திலுள்ள பொதுமக்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் விசனம் தெரிவிக்கின்றார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு உரித்தான குழாய்நீர் விநியோகத்தில் காணப்படும் கசிவுகள் காரணமாக குடிநீரானது, வீதிகளில் தேங்கி நிற்பதால் பொதுமக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்துவதுடன் சுகாதார ரீதியான பிரச்சினைகளையும் ஏற்படுத்துகின்றது.

பொதுமக்கள், மாணவர்கள் குடிப்பதற்கு பயன்படுத்தும் குடிநீரானது வீதிகளில் கசிந்து வடிந்தோடுவதுடன், அவ்விடத்தில் கால்நடைகளும் குடிநீரைப் பயன்படுத்துகின்றது.

துறைநீலாவணை கிராமத்தில் சுமார் 3500 குடும்பங்கள் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் இணைப்பு பெற்றவர்கள் குடிநீர் தேவை உட்பட ஏனைய தேவைகளுக்கும் பயன்படுத்தி வருகின்றார்கள். துறைநீலாவணை மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலை வீதி, மாரியம்மன் ஆலய வீதி மற்றும் மகாவித்தியாலய வீதிகளில் நீர்க் கசிவுகள் ஏற்பட்டு கிராமத்தில் அசௌகரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்விடயமாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் மட்டக்களப்பு மாவட்ட முகாமையாளர், பொறியியலாளர், கல்லாறு நிலையப் பொறுப்பதிகாரிகள் கவனம் செலுத்தி துறைநீலாவணை கிராமத்திலுள்ள நீர்க்கசிவுகளை சீர்செய்துதர வேண்டுமென கோரிக்கை விடுக்கின்றார்கள்.



# கிழக்கில் புனித நோன்புப் பெருநாள் தொழுகை


பாலமுனை ஹைமா பள்ளிவாசல்


கிண்ணியா


அட்டாளைச்சேனை கோணாவத்தை
முஃபினின் பள்ளிவாசல்


ஓட்டமாவடி மண்ணு ஸல்வா வளாகம்


சவளக்கடை 06ஆம் கிராமம்
பிலால் ஜும்ஆ பள்ளிவாசல்


செம்மண்ணோடை குபா
ஜும்ஆ பள்ளிவாசல்


ஏறாவூர்


கல்முனை கடற்கரை வீதி


சாய்ந்தமருது கடற்கரை


காத்தான்குடி

# ஐந்நூறு மருந்து வகைகளின் விலை நூற்றுக்கு 69 சதவீதத்தால் அதிகரிப்பு!

## உடனடித் தீர்வு வழங்காவிட்டால் சுகாதாரத்துறை பாரதூரமான நிலைமைக்குள்ளாகும் என எச்சரிக்கை

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை அடுத்து கடந்து இரு மாதங்களில் ஐந்நூறுக்கும் அதிகளவான மருந்து வகைகளின் விலையை நூற்றுக்கு 69 சதவீதத்தால் அதிகரிக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக அரச மருந்தாளர்கள சங்கத்தின் தலைவர் அஜித் திலகரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த மருந்து வகைகளின் விலைகள் கடந்த மார்ச் மாதத்தில் நூற்றுக்கு 29 சதவீதத்தாலும் ஏபர்ல் மாதத்தில் நூற்றுக்கு 40 வீதத்தாலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

பல்வேறு வர்த்தகப் பெயர்களில் விற்பனை செய்யப்படும் 60 வகையான மருந்துகளின் விலைகள் தொடர்பான வர்த்தமானி சுகாதார அமைச்சினால் கடந்த 30ஆம் திகதி வெளியிடப்பட்டதையடுத்து, சந்தைகளில் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள 500இற்கும் அதிகளவான வர்த்தகப் பெயர்களுக்கமைய விற்பனை செய்யப்படும் மருந்து வகைகளின் விலைகள் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று, விலை நிர்ணயத்துக்கு உட்படாத மருந்துகளின் விலைகள் கடந்த இரு மாதங்களில் நூற்றுக்கு 69 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளன. அமெரிக்க டொலரின் பெறுமதி அதிகரிக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மருந்துகளின் விலைகளை அதிகரிக்கவேண்டிய நிலை சுகாதார அமைச்சுக்கு ஏற்பட்டுள்ளது. அரச மருந்து ஒழுங்குபடுத்தல் கூட்டுத்தாபனம் மற்றும் அரச மருந்தாக்கல் ஒழுங்குபடுத்தல் கூட்டுத்தாபனம் என்பவை அவற்றின் கொள்கை நோக்கங்களுக்கப்பால் அரசியல் மயமாக்கப்பட்டுள்ளமையினாலேயே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது.

பேராசிரியர் சேனக்க பிபிலே, மருந்து கொள்கைகளுக்கமைய இவ்விரு நிறுவனங்களும் நிர்வகிக்கப்படுமாக இருந்தால், வர்த்தக நாமங்கொண்ட மருந்து வகைகளை விநியோகிக்க வேண்டிய தேவை சுகாதார அமைச்சு அல்லது தேசிய மருந்தாக்கல் அதிகார சபை என்பவற்றுக்கு இல்லை. மேலும், டொலரின் பெறுமதி அதிகரிக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அதற்கு சரிசமமாக மருந்து வகைகளின் விலைகளையும் அதிகரிக்க வேண்டிய அவசியம் இல்லை.

டொலரின் பெறுமதிக்கேற்ப நோயாளர்களின் வருமானம் அதிகரிக்கப்படுவதில்லை. இவ்வாறானதொரு சூழ்நிலையில், மருந்துகளின் விலை அதிகரிக்கப்படுவதால் நோயாளர்கள் கடுமையாக பாதிக்கப்படுவதுடன், மருந்துகளை உற்பத்தி செய்தல், விநியோகித்தல் என சகல மருந் சார் தொழிற்றுறையும் எதிர்காலத்தில் கடுமையாக வீழ்ச்சியை சந்திப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன.

இதுதொடர்பில் உடனடியாக கவனம் செலுத்தி மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்காவிட்டால் எதிர்காலத்தி மக்களின் சுகாதார பிரச்சினைகள் பாரதூரமான எச்சரிக்கை நிலைக்கு தள்ளப்படுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# உள்நாட்டு அரிசி வகைகளுக்கும் அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயம்

உள்நாட்டு அரிசிக்கான அதிகபட்ச சில்லறை விலை, நேற்று முன்தினம் (02) முதல் அமுலுக்கு வரும் வகையில் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் நுகர்வோர் விவகார அதிகார சபையினால் வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைவாக , வெள்ளை மற்றும் சிவப்பு நாட்டரிசி ஒரு கிலோ கிராமின் விலை 220 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வெள்ளை மற்றும் சிவப்பு சம்பா அரிசி ஒரு கிலோகிராமின் விலை 230 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும், கீரி சம்பா ஒரு கிலோ கிராமின் விலை 260 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# பாலாவி – கற்பிட்டி பிரதான வீதியில் விபத்து!

## கற்பிட்டி பிரதேச சபை உறுப்பினரொருவர் காயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் சேர்ப்பு

*(ரஸீன் ரஸ்மின்)*

புத்தளம், பாலாவி – கற்பிட்டி பிரதான வீதியின் தளுவ பகுதியில் நேற்று முன்தினம் (02) இடம்பெற்ற வீதி விபத்தில் கற்பிட்டி பிரதேச சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் முஹம்மட் அக்மல் படுகாயமடைந்துள்ள நிலையில், புத்தளம் தள வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குறித்த பிரதேச சபை உறுப்பினர் பயணித்த மோட்டார்சைக்கிள், சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த பிரதேச சபை உறுப்பினரை அங்கிருந்தவர்கள் உடனடியாக புத்தளம் தள வைத்தியசாலையில் சேர்த்த பின்னர், அவர் மேலதிக சிகிச்சைகளுக்காக நேற்றிரவே கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இவ்வாறு கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த பிரதேச சபை உறுப்பினர் மீண்டும் புத்தளம் தள வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு, அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த விபத்தில் சைக்கிளில் பயணம் செய்த நபர் சிறியளவிலான காயங்களுக்கு உள்ளாகியுள்ளபோதிலும், பிரதேச சபை உறுப்பினரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக பொலிஸார் மேலும் கூறினர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் நுரைச்சோலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



புத்தளம் இஸ்லாமிய கலாசார நலன்புரி சங்கத்தினர் ஏற்பாடு செய்த பெருநாள் தொழுகை நேற்று (03) காலை இடம்பெற்றது. புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலையின் மைதானத்தில் (கறுப்புத் தரவை) நிகழ்வில் பெருநாள் குத்பா உரையை அஷ்ஷெய்க் எச்.எம்.மின்ஹாஜ் (இஸ்லாஹி) நிகழ்த்தியதுடன், பெருநாள் தொழுகையையும் நடத்தினார்.

(படங்கள் - ரஸீன் ரஸ்மின்)

# வீதி அபிவிருத்தியிலுள்ள குறைபாடுகளை சீர்செய்யுங்கள்

## அங்கஜன் எம்.பி. வேண்டுகோள்

*(சாவகச்சேரி நிருபர்)*

யாழ்ப்பாணம், மானிப்பாய், காரைநகர் பிரதான வீதியின் அபிவிருத்திப் பணிகளை முழுமைப்படுத்துமாறு யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் யாழ். மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபை பிரதம பொறியியலாளருக்கு கடிதம் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளார். குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

யாழ்ப்பாணம், மானிப்பாய், காரைநகர் பிரதான வீதி அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்று வருகின்றபோதிலும் அவ் வீதியிலுள்ள மதகு மற்றும் பாலங்கள் புனரமைக்கப்படவில்லையென எமக்கு கடந்த காலங்களில் முறைப்பாடுகள் கிடைத்திருந்தன.

அதனடிப்படையில் கடந்த ஜனவரி மாதம் இரண்டாம் திகதி எனது தலைமையில் யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் வீதி அபிவிருத்திப் பணிகள் நிறைவடைந்ததும் மதகு/பால வேலைகள் இடம்பெறும் என தங்களால் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், தற்போது குறித்த வீதியின் மதகு மற்றும் பால வேலைகள் முழுமைப்படுத்தப்படாமல் வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருப்பதாகவும், அவ் வேலைத்தளத்தில் பயன்படுத்தப்பட்ட இயந்திர உபகரணங்கள் இடம்மாற்றப்பட்டிருப்பதாகவும் பொதுமக்களிடமிருந்து மீண்டும் முறைப்பாடுகள் கிடைக்கின்றன.

நிதி அமைச்சின் கடந்த ஏப்ரல் மாதம் 26ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்று நிருபத்திற்கமைவாக குறித்த வேலைகள் தொடர்பாக தங்களால் எடுக்கப்படும்



நடவடிக்கைகளை அறியத்தருவதுடன், குறித்த வீதி வேலைகளை இடைநிறுத்துவதாயின் வீதியானது பொதுமக்களின் பயன்பாட்டிற்கு ஏற்றதாக இருப்பதனை தங்கள் திணைக்களம் உறுதிப்படுத்த வேண்டியது அவசியமாகவுள்ளது. வீதி ஒப்பந்தக்காரருக்கான கொடுப்பனவுகளை வழங்க முன்னர் தாங்கள் உறுதியளித்த வகையில் பொறுப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு அறிக்கையினை அனுப்பிவைக்குமாறு மேலும் அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

கடிதப் பிரதிகளை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை மாகாண பணிப்பாளர் ஆகியோருக்கும் அனுப்பிவைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எரிபொருள் தாங்கி மீது தாக்குதல் நடத்திய நால்வர் கைது

எரிபொருள் தாங்கி உரிமையாளர்களின் வேலைநிறுத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தபோது கொலன்னாவையிலிருந்து கொடகவெல வரை எரிபொருள் எடுத்துச்சென்ற எரிபொருள் தாங்கி மீது முல்லேரியா, கல்வான சந்திக்கு அருகில் வைத்து, தாக்குதல் நடத்தி நட்டம் ஏற்படுத்திய எரிபொருள் தாங்கி உரிமையாளர் உள்ளிட்ட மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக முல்லேரியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எரிபொருள் தாங்கி உயிரிமையாளர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தவர் என்றும், வேலைநிறுத்தம் தொடர்பில் கவனம் செலுத்தாது எரிபொருள் போக்குவரத்தில் ஈடுபட்டமைக்காக நேற்று முன்தினம் (02) மாலை இந்த எரிபொருள் தாங்கி மீது தாக்குதல் நடத்தி நட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகத்துக்குரிய எரிபொருள் தாங்கி உரிமையாளர் முல்லேரியா, கல்வான பிரேதேசத்தைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நால்வரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நேற்று (03) பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்வு



தந்தை செல்வாவின் நினைவு தினத்தை முன்னிட்டு தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

தந்தை செல்வாவின் நினைவு கொடி அணிவிக்கும் நிகழ்வையும் நடத்தியபோது கொழும்பு மாநகர சபை உறுப்பினர்கள் சுதர்சன், சிவரஞ்சன் ஆகியோர் தந்தை செல்வாவின் படத்திற்கு மலர்மாலை அணிவித்தனர்.



கொழும்பு மாநகர சபை உறப்பினர் ஜெயசங்கர் மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்வை ஆரம்பித்துவைத்ததுடன், அதிபர் முருகானந்தன், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் கணேஸ், மன்ற பொதுச் செயலாளர் எஸ்.கே.தளையரட்ணம். நிர்வாக செயலாளர் திருமதி புவனேஸ்வரி, பிரதித் தலைவர் ரவிந்திரன், நிலாம், ராஜா, திருமதி மணி மேகலாதேவி கே.ஈஸ்வரலிங்கம் ஆகியோரும் மூக்குக்கண்ணாடியை வழங்கினர்.

# நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான மகா கும்பாபிஷேகம் இன்று

சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி அருள்மிகு வீரகத்தி விநாயகர் தேவஸ்தான புனருத்தாரண நவ குண்டபக்ஷ மகா கும்பாபிஷேகம் இன்று (04) காலை 8.05 மணிமுதல் 10.35 மணிவரையுள்ள சுப நேரத்தில் இடம்பெறவுள்ளது.

மகா கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 24 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறவுள்ளது.

இந்த மகா கும்பாபிஷேகத்தை கும்பாபிஷேக பிரதம குரு 'கிரியா ரத்தினா' சிவ ஸ்ரீ ராம் சண்முகானந்தக் குருக்கள், ஆலய பிரதம குரு "சர்வபோதகம் பண்டிதர்" கலாநிதி து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள்m சிவஸ்ரீ ஜெகதீஷ மயுரக்குருக்கள், சிவஸ்ரீ சோ.பிரசன்னாக்குருக்கள் ஆகியோர் நடத்தி வைப்பர்.

மகா கும்பாபிஷேக வாழ்த்துரையை சிவஸ்ரீ குமாரசுவாமிநாதக் குருக்களும் அருளாசியை நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், மாவை ஆதீனம் மஹாராஜஸ்ரீ இரத்தினசபாபதிக் குருக்களும் வழங்குவர்.

# துப்பாக்கிமுனையில் கப்பம் பெற்றுவந்த நபர் கைது

இங்கிரிய மற்றும் ஹொரணை ஆகிய பிரதேசங்களில் வியாபாரிகளிடம் துப்பாக்கியை காட்டி அச்சுறுத்தல் விடுத்து கப்பம் கோரிய சந்தேகநபரொருவர், ஹொரணை, நுகேகொடவத்த பிரதேசத்தில் வைத்து விசேட அதிரடிப்படையின் திட்டமிடப்பட்ட குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் இங்கிரிய பிரதேசத்தில் வர்த்தகரொருவரிடம் 35 இலட்சத்துக்கும் அதிகளவான பணம், எட்டு குடும்பங்களில் தங்க ஆபரணங்களை கப்பமாக பெற்றுக்கொண்டமை, மேலுமொரு வியாபாரியொருவரிடம் 10 இலட்சம் ரூபா பணம் பெற்றுக்கொண்டமை தொடர்பில் விசேட அதிரடிப்படையினருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

அதற்கமைய வங்கி கணக்கறிக்கை, தொலைபேசி இலக்கத்தினூடாக முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஹொரணை, நுகேகொடவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயது இளைஞரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக ஹொரணை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.



புறகஹதெனிய ஜாமிஉத் ஜும்ஆப் பள்ளிவாசலின் ஏற்பாட்டில் நோன்புப் பெருநாள் தொழுகை திடலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மௌலவி எஸ். எச். இஸ்மாயீல் குத்பா பேருரையையும் மௌலவி ஜெமிஹுல் ரஹ்மான் தொழுகையையும் நடத்திவைத்தனர். (படங்கள் - இக்பால் அலி)

# புட்டினுக்கு புற்றுநோய்: பதவி விலகுகிறாரா?




ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் புற்றுநோய் சிகிச்சை எடுத்துக்கொள்வதற்காக ஜனாதிபதி பதவியிலிருந்து தற்காலிகமாக விலகி, நாட்டின் பாதுகாப்புச் சபை செயலாளர் நிகோலா பட்ரு ஷேவிடம் பொறுப்பை ஒப்படைக்கவிருப்பதாக உறுதிசெய்யப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

புற்றுநோய்க்கு உடனடியாக அறுவை சிகிச்சை மேற்கொள்ள வேண்டும் என்று புட்டினுக்கு மருத்துவர்கள் அறிவுறுத்தியிருப்பதாக ரஷ்யாவின் முன்னாள் வெளியுறவு புலனாய்வு சேவையின் தலைவர் தனது டெலிகிராம் பக்கத்தில் தெரிவித்திருப்பதாக மேற்கோள்காட்டி நியூயோர்க் போஸ்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த அறுவை சிகிச்சையைத் தொடர்ந்து குணமடையும் காலத்தில் புட்டினுக்கு தற்காலிகமாக உடல் செயலிழப்பு ஏற்படக்கூடும் என்றும் அந்த செய்தியில் கூறப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

# ஈராக்கை தாக்கிய புழுதிப் புயல்: செம்மஞ்சள் நிறமான வானம்



ஈராக்கில் வழக்கத்திற்கு மாறாக வீசிய புழுதிப் புயலால் மக்கள் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

பருவ நிலை மாற்றம், வறட்சி, மழைப் பொழிவு குறைவு உள்ளிட்ட காரணங்களால் புழுதிப் புயல் ஏற்பட்டிருக்கலாம் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

500 மீற்றருக்கு குறைவிலான பகுதிகளில் புழுதிப் புயல் வீசியதால் எதிரில் வரும் வாகனங்கள் கண்களுக்கு புலப்படாமல் வாகன ஓட்டிகள் அவதிக்குள்ளாகினர். மோசமான வானிலை காரணமாக பக்தாத், நஜாப், இர்பில் விமான நிலையங்களில் விமான சேவைகள் இரத்துச் செய்யப்பட்டன.

உலக செய்திகள்

## 60 நாடுகளைச் சேர்ந்தவர்கள் விசா இன்றி வருவதற்கு நியூசிலாந்து அரசு அனுமதி

நியூசிலாந்து அரசு அனுமதியளித்ததைத் தொடர்ந்து அமெரிக்கா, பிரித்தானியா, சிங்கப்பூர் உள்ளிட்ட 60 நாடுகளிலிருந்து முழுமையாக தடுப்பூசி செலுத்திக்கொண்ட பயணிகள் அந்நாட்டிற்கு செல்லத்தொடங்கியுள்ளனர்.

நீண்ட நாட்களுக்குப் பின்னர் ஒக்லாந்திற்கு சென்றவர்களை அவர்களது உறவினர்கள் ஆரத்தழுவி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

அத்துடன், மாவோரி நடனக் கலைஞர்கள் நடனமாடி பயணிகளுக்கு உற்சாக வரவேற்பளித்தனர். பயணிகளுக்கு குவாரண்டைன் கட்டுப்பாடுகள் எதுவும் விதிக்கப்படவில்லை.

# மரியுபோல் இரும்பு ஆலை பதுங்கு குழியில் குழந்தைகள் - அழுகிய நிலையில் சடலங்கள்

- நூற்றுக்கும் மேற்பட்டோரை மீட்கும் பணி ஆரம்பம்
- உக்ரைனின் கிழக்கு பகுதிகளை தங்கள் நாட்டுடன் இணைக்க ரஷ்யா திட்டம்



மரியுபோலின் இரும்பு ஆலை பதுங்கு குழியில் நூற்றுக்கணக்கான குழந்தைகள், அழுகிய நிலையில் ஏராளமான சடலங்கள் இருப்பதாக உக்ரைன் இராணுவத்தின் 12ஆவது படைப்பிரிவுத் தலைவர் தெரிவித்துள்ளார். அங்கு சிக்கியிருக்கும் நூற்றுக்கணக்கான மக்களை மீட்கும் பணி தொடங்கியுள்ளது.

இதேவேளை, உக்ரைனின் கிழக்கு பகுதிகளை தங்கள் நாட்டுடன் இணைக்க ரஷ்யா திட்டமிட்டு வருவதாக அமெரிக்கா எச்சரித்துள்ளது.

நேட்டோ கூட்டணியில் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்தது. இப் போர் இன்று இரண்டு மாதங்களை (70ஆவது நாளாகவும்) கடந்துள்ளது.

**உக்ரைனின் கிழக்கு பகுதிகளை தங்கள் நாட்டுடன் இணைக்க ரஷ்யா திட்டம்**

உக்ரைனின் கிழக்கு பகுதிகளை தங்கள் நாட்டுடன் இணைக்க ரஷ்யா திட்டமிட்டு வருவதாக அமெரிக்கா எச்சரித்துள்ளது.

லுஹான்ஸ்க், டொனெட்ஸ்க் உள்ளிட்ட உக்ரைனின் கிழக்கு பகுதிகளை இம்மாதத்தில் ரஷ்யாவுடன் இணைக்கவும், இதற்கான வாக்கெடுப்பை நடத்தவும் ரஷ்யா திட்டமிட்டுள்ளதாக ஐரோப்பிய பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்புக்கான அமெரிக்கத் தூதர் மைக்கேல் கார்பென்டர் தெரிவித்துள்ளார்.

இதேபோன்று, உக்ரைனின் முக்கிய துறைமுக நகரமான கெர்சன் நகரையும் சுதந்திர குடியரசாக அங்கீகரிக்க ரஷ்யா திட்டமிட்டுள்ளதாக தெரிவித்துள்ள அவர், உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆதிக்க நடவடிக்கைகளை அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் ஒருபோதும் அங்கீகரிக்காது என தெரிவித்துள்ளார்.

கிழக்கு மற்றும் தெற்கு உக்ரைன் நகர மேயர்கள், அதிகாரிகள் கடத்தப்பட்டுள்ளதும், அங்கு இணையம் மற்றும் தொலைத்தொடர்பு சேவைகள் துண்டிக்கப்பட்டிருப்பதும் ரஷ்யாவின் நடவடிக்கைகளை உறுதிபடுத்துவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

**ஒடெசா நகர் மீதான ஏவுகணைத் தாக்குதலில் 14 வயது சிறுவன் பலி**

உக்ரைனின் ஒடெசா நகர் மீது ரஷ்யப் படைகள் நிகழ்த்திய ஏவுகணைத் தாக்குதலில் 14 வயது சிறுவன் ஒருவன் உயிரிழந்ததாக உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து காணொளியில் பேசிய அவர், ஒடெசா நகரிலுள்ள மாணவர்களின் விடுதி மீது ரஷ்யப் படைகள் நடத்திய தாக்குதலில் சிறுவனொருவன் உயிரிழந்த நிலையில், மேலும் ஒரு சிறுமி படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருவதாகத் தெரிவித்தார்

ரஷ்யப் படைகளின் தாக்குதலினால் கட்டடங்களிலிருந்து விண்ணை முட்டும் அளவிற்கு அடர்ந்த கரும்புகை வெளியேறியது. சேதமடைந்து தீப்பற்றி எரியும் தீயின் நடுவே தீயணைப்பு வீரர்கள் தீ அணைக்கும் பணியை மேற்கொண்டனர்.

முன்னதாக, ரஷ்யப் படைகள் அங்குள்ள ஒரு தேவாலயத்தின் மீது தாக்குதல் நடத்தியதாக உக்ரைன் அதிகாரிகள் தெரிவித்தனர்.





**பொதுமக்கள் 3,153 பேர் உயிரிழப்பு**

இதேவேளை, உக்ரைனில் ரஷ்யப் படைகள் நடத்திய தாக்குதலில் பொதுமக்கள் 3,153 பேர் உயிரிழந்ததாகவும், ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளதாகவும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் தெரிவித்துள்ளது.

பெரும்பாலானோர் ரஷ்யாவின் ஏவுகணை மற்றும் விமானத் தாக்குதல்களில் கொல்லப்பட்டதாக ஆணையத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. உத்தேசமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை வெளியிடப்பட்டுள்ளதாகவும், தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இதை விட அதிகளவில் இருக்கக்கூடும் எனவும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் தெரிவித்துள்ளது.

மேலும் போர் காரணமாக இதுவரை 56 இலட்சம் பேர் உக்ரைனிலிருந்து வெளியேறி அண்டை நாடுகளில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர்.

**ரஷ்ய ஆயுதக் கிடங்கு தகர்ப்பு**

ரஷ்யாவின் ஆயுதக் கிடங்கை உக்ரைன் படைகள் குண்டுவீசித் தாக்கி அழித்த வீடியோ காட்சிகள் வெளியாகியுள்ளன.

பெல்கோராட் பகுதியில் ஆயுதக் கிடங்கை உக்ரைன் படைகள் குண்டுவீசித் தாக்கி அழித்ததாகவும், இந்தத் தாக்குதலில் ஒருவர் காயமடைந்ததாகவும் ரஷ்யா தெரிவித்துள்ளது. முன்னதாக கருங்கடலின் பாம்பு தீவுக்கு அருகே ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த 2 ரஷ்யப் படகுகளை உக்ரைன் படைகள் தாக்கி அழித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



**மரியுபோலில் மீட்பு நடவடிக்கை**

இந்நிலையில் தற்போது, உக்ரைனின் கிழக்கு, தெற்குப் பகுதிகளில் ரஷ்ய இராணுவம் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது. துறைமுக நகரமான மரியுபோலை சமீபத்தில் ரஷ்ய இராணுவம் கைப்பற்றிய நிலையில், அங்குள்ள மிகப்பெரிய இரும்பு ஆலை அமைந்துள்ள பகுதி மட்டும் உக்ரைன் படையினர் வசமுள்ளது. அங்கு 2,000இற்கும் மேற்பட்ட மக்கள் பதுங்கியுள்ளனர்.

மரியுபோல் நகரம் போரில் முற்றிலும் உருக்குலைந்த நிலையில், இரும்பு ஆலையில் சிக்கியவர்களை மீட்கும் பணி நேற்றுமுன்தினம் தொடங்கியது. ரஷ்யப் படையின் குண்டுவீச்சில் தரைமட்டமாகி கிடக்கும் இரும்பு ஆலையில் பதுங்கு குழிகளிலிருந்து சிலர் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டனர். 46 பேரை ரஷ்ய இராணுவம் வெளியேற்றியுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

உக்ரைன் இராணுவத்தின் 12ஆவது படைப்பிரிவுத் தலைவர் தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில்,

''ஆக்கிரமிப்பிலுள்ள இரும்பு ஆலைக்குள் நூற்றுக்கணக்கான குழந்தைகள், மக்கள் சிக்கித் தவிக்கின்றனர். 500இற்கும் மேற்பட்ட உக்ரைன் படைவீரர்கள், அழுகிய நிலையில் ஏராளமான சடலங்கள் கிடக்கின்றன. பதுங்கு குழியில் உள்ளவர்களை வெளியேற்ற மேலும் சில நாட்கள் கூடுதலாக தேவைப்படும்'' என தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் செய்தித் தொடர்பாளர் சாவியானோ அப்ரூ, ''இரண்டு மாதங்களுக்கு மேலாக மரியுபோல் இரும்பு ஆலையில் சிக்கித் தவித்த மக்கள் சிறிது சிறிதாக மீட்கப்பட்ட பின்னர், அவர்களுக்கு உளவியல் சோதனை உள்ளிட்ட அனைத்து சேவைகளும் வழங்கப்படும்'' என தெரிவித்தார்.

# கடும் பொருளாதார நெருக்கடிக்குள் வாடும் இலங்கைக்கு உதவ நிதியுதவி வழங்கிடுங்கள்

## தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்



''இலங்கையில் தற்போது நிலவிவரும் கடும் பொருளாதாரச் சூழ்நிலையில் கடும் சிரமத்திற்குள்ளாகியுள்ள மக்களுக்கு தமிழ்நாட்டிலிருந்து உணவு, அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் உயிர் காக்கும் மருந்துகள் அனுப்பிவைக்கப்படும் என்று அறிவித்திருந்தேன். இதற்கான ஒன்றிய அரசின் அனுமதியும் தற்போது கிடைத்துள்ளது. இதன் முதற்கட்டமாக தமிழ்நாட்டிலிருந்து 40 ஆயிரம் தொன் அரிசி, 500 தொன் பால் மா மற்றும் உயிர்காக்கும் மருந்துகள் விரைவில் அனுப்பிவைக்கப்படவுள்ளன.

இந்தச் சூழ்நிலையில் வாடும் மக்களுக்கு உதவிடும் வகையில் நல்லெண்ணம் கொண்ட அனைவரும் நம்மால் இயன்ற உதவியை செய்யவேண்டிய தருணம் இது. எனவே, மனிதாபிமான அடிப்படையில், இலங்கை மக்களுக்குத் தேவையான உதவிகளை செய்திட நன்கொடைகள் வழங்கிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் வழங்கிடும் உதவிகள் இலங்கை மக்களுக்குத் தேவையான பொருட்களாக வாங்கி அனுப்பிவைக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்கொடை வழங்க விரும்புவோர் பின்வரும் ஏதேனும் ஒரு வழியில் வழங்கலாம்.

A. மின்னணு பரிவர்த்தனை மூலம் நன்கொடை வழங்க விரும்புவோர்:-

1. மின்னணு பரிவர்த்தனை: https://ereceipt.tn.gov.in.cmprf/cmprf.html

வங்கி : இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

வங்கிக் கிளை: தலைமைச் செயலகக் கிளை, சென்னை – 600 009

சேமிப்பு வங்கி கணக்கு எண்: 117201000000070

IFSC குறியீடு: IOBA0001172

CMPRF பான் எண்: AAAGC0038F

- இவ்வாறு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹாலின் முன்றலில் இடம்பெற்ற நோன்புப் பெருநாள் தொழுகை....

# மெட் காலா நிகழ்வில் தாயுடன் எலான் மஸ்க்



அமெரிக்காவின் நியூயோர்க்கில் நடைபெற்ற மெட் காலா - 2022 ஆடையலங்கார நிகழ்ச்சியில், உலக பெரும் கோடீஸ்வரரும், டெஸ்லா நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியுமான எலான் மஸ்க் பங்கேற்றார்.

ட்விட்டர் நிறுவனத்தை சுமார் 44 மில்லியன் டொலர்களுக்கு வாங்கிய பின்னர், அவர் பங்கேற்கும் முதல் பொதுநிகழ்ச்சி இதுவாகும். கறுப்பு நிற tuxedo சூட் அணிந்து வந்த எலான் மஸ்க், 74 வயதான தனது தாய் மேய் மஸ்க் உடன் சிவப்பு கம்பளத்தில் நடந்து வந்து பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்தார்.

இந்நிகழ்ச்சியில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த பிரபலங்கள் கண்கவர் உடையணிந்து பங்கேற்றனர். சூப்பர் மொடல் பெல்லா ஹடிட், கறுப்பு நிறத்தில் கவர்ச்சிகர உடையணிந்து வந்தது அனைவரது கவனத்தையும் ஈர்த்தது. நியூயோர்க் நகர பொலிஸ் ஆணையர் லாரி கம்போ - பாபி டிஜி ஒலிசா ஜோடி மெட் காலா நிகழ்ச்சியிலேயே தங்கள் திருமண நிச்சயதார்த்தத்தை நடத்திக்கொண்டனர்.



# மஹேலவின் கனவு ரி20 அணி!

## 5 வீரர்களுக்கு மாத்திரமே இடம்

மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைமைப் பயிற்சியாளராக இருந்துவரும் இலங்கை அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜெயவர்தன ஐவர் அடங்கிய தன்னுடைய கனவு ரி20 அணியை வெளியிட்டுள்ளார்.

பத்திரிகை ஒன்றுக்குப் பேட்டி கொடுத்துள்ள ஜெயவர்தன, தனது கனவு ரி20 அணியின் 5 வீரர்களை தெரிவுசெய்து அறிவித்துள்ளார்.

''என்னைப் பொறுத்தவரை ரி20 கிரிக்கெட்டிற்கு பந்துவீச்சாளர்களே மிக முக்கியம். அந்தவகையில் துடுப்பெடுத்தாடக்கூடிய தலைசிறந்த ஸ்பின்னர் ரஷித் கானை நான் முதலில் தெரிவுசெய்ய விரும்புகிறேன்'' எனக் கூறியுள்ளார்.

இதனையடுத்து, 7, 8ஆம் இடங்களில் விளையாடும் ரஷித் கானை வெவ்வேறு வித்தியாசமான வகையில் பயன்படுத்த முடியும். எனவே, அவருக்கு முன்னுரிமை கொடுக்கிறேன். அடுத்து ஜோஸ் பட்லரை இரண்டாவதாக தெரிவுசெய்ய விரும்புகிறேன். பட்லரால் எந்தவொரு பந்துவீச்சாளரையும் எளிதில் எதிர்கொள்ள முடியும். இதனைத் தொடர்ந்து இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பரீத் பும்ரா, பாகிஸ்தானைச் சேர்ந்த விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேன் முகமது ரிஸ்வான், பௌலர் ஷாஹீன் அப்ரீதி ஆகியோரையும் தெரிவுசெய்ய விரும்புகிறேன்'' எனக் கூறினார். ஜெயவர்தனே தேர்வு செய்த கனவு ரி20 அணி (5 பேர்)

ரஷித் கான், ஷாஹீன் அப்ரீதி, ஜஸ்பரீத் பும்ரா, ஜாஸ் பட்லர், முகமது ரிஸ்வான்.



# விம்பிள்டன் டென்னிஸ் தொடரில் ரஷ்ய – பெலாரஸ் வீரர்களுக்குத் தடை!

## நடால், ஜோகோவிச் எதிர்ப்பு

உக்ரைன் மீதான ரஷ்யப் படையெடுப்பு 2 மாதங்களுக்கும் மேலாக நடைபெற்று வருகிறது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் ரஷ்யா மீது பல்வேறு தடைகளை விதித்து வருகின்றன. அதேபோன்று ரஷ்யா மற்றும் பெலாரஸ் நாட்டைச் சேர்ந்த டென்னிஸ் வீரர்கள் நடைபெறவுள்ள விம்பிள்டன் போட்டியிலும் கலந்துகொள்ள முடியாதென தடைவிதிக்கப்பட்டது.

இந்தத் தடையால் அமெரிக்க ஓபன் சம்பியன் டேனில் மெத்வதேவ், ஆண்ட்ரி ரூப்ளேவ், ஃபிரெஞ்ச் ஓபன் போட்டியில் 2ஆவது இடம் பிடித்த அனஸ்தேசிய பாவ்லியுசென்கோவா உள்ளிட்ட முக்கிய ரஷ்ய வீரர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அதேபோல் பெலாரசை சேர்ந்த விக்டோரியா அஜரென்காவும் விளையாடுவதற்கு தடை செய்யப்பட்டுள்ளார்.

இதற்கு டென்னிஸ் நட்சத்திரங்கள் ரபேல் நடால், ஜோகோவிக் ஆகியோர் கடும் கண்டனத்தை பதிவுசெய்துள்ளனர்.

ரஷ்யாவைச் சேர்ந்த எனது டென்னிஸ் நண்பர்கள், சக வீரர்கள் விம்பிள்டனொல் விளையாடுவதற்கு தடைசெய்யப்பட்டுள்ளனர். நடைபெற்றுவரும் ரஷ்யப் போருக்கு அவர்கள் காரணம் கிடையாது. அவர்களுக்காக நான் மன்னிப்பு கேட்கிறேன் என நடால் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் கொரோனா தடுப்பூசி போடாததால் அவுஸ்திரேலியாவிலிருந்து நான் வெளியேற்றப்பட்டேன். அதுவும் இதுவும் ஒன்றல்ல. இருப்பினும், நான் எத்தகைய சிக்கல்களை சந்தித்தேனோ அதேபோன்ற சிக்கல்களைத்தான் எனது நண்பர்கள் சந்திக்கிறார்கள். நான் இப்போதும் என் நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கிறேன். நான் விம்பிள்டனுக்கு ஆதரவு தர மாட்டேன். இது நியாயம் அல்ல. இது சரியல்ல என ஜோகோவிச் தெரிவித்துள்ளார்.

இவர்களின் கருத்துக்கு விம்பிள்டன் போட்டியை நடத்தும் அனைத்து இங்கிலாந்து கிளப் பதிலடி கொடுத்துள்ளது. இத்தகைய நியாயமற்ற மற்றும் இதற்கு முன் இல்லாத இராணுவ ஆக்கிரமிப்பின் சூழ்நிலையில், டென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டியில் ரஷ்ய அல்லது பெலாரஸ் வீரர்கள் பங்கேற்பது மூலம் ரஷ்ய ஆட்சி எந்த நன்மையையும் பெறுவது ஏற்றுக்கொள்ள முடியாதது என கூறியுள்ளது.



# புனேயில் அதிரடி காட்டும் ருதுராஜ்; மும்பை மைதானத்தில் தடுமாற்றம்!

## டீம் மீட்டிங்கில் தோனி எச்சரிக்கை

நடப்பு சம்பியனான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ருதுராஜ். கெய்க்வாட் ஜடேஜாவின் தலைமையில் முதல் 8 போட்டிகளில் விளையாடிய அவர், ஒரு போட்டியில் மட்டுமே சிறப்பாக விளையாடி 73 ஓட்டங்களை அடித்திருந்தார். அதனை தவிர்த்து மற்ற போட்டிகளில் அவர் பெரியளவில் சோபிக்கவில்லை.

இந்நிலையில், தலைவர் பதவியிலிருந்து ஜடேஜா விலகியதும் மீண்டும் தோனி தலைமையில் சன்ரைசர்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் மீண்டும் தனது அசுரத்தனமான ஆட்டத்தை வெளிப்படுத்திய அவர், 57 பந்துகளில் 6 சிக்ஸர் மற்றும் 6 பவுண்டரி என 99 ஓட்டங்களை எடுத்து அசத்தினார். அவர் சதத்தை தவறவிட்டிருந்தாலும் அவரது இந்த சிறப்பான ஆட்டம் செஞ்சுரி அடித்ததற்கு சமம் என்று அனைவரும் தங்களது பாராட்டுகளை தெரிவித்து வருகின்றனர்.

ருதுராஜின் ஆட்டம் சிறப்பாக இருந்தாலும் அவர் மீது இன்னும் முழு திருப்தியடையவில்லை என்று டீம் மீட்டிங்கின்போது அணித் தலைவர் மகேந்திர சிங் தோனி வெளிப்படையாக பேசியுள்ளார்.

இது குறித்த விவரமும் தற்போது இணையத்தில் வெளியாகி வைரலாகி வருகிறது.

அதன்படி கடந்த போட்டியில் வெற்றிபெற்ற பிறகு டீம் மீட்டிங்கில் கலந்துகொண்ட தோனி பேசுகையில், கான்வே மற்றும் ருதுராஜ் ஆகிய இருவரையும் பாராட்டியுள்ளார். இவர்கள் இருவரும் அதிரடி காட்டவில்லையென்றால் வெற்றி கிடைத்திருக்காது.

இருப்பினும், ருதுராஜின் ஆட்டத்தை நான் ஒரு கவலைக்குரிய விடயமாக பார்க்கிறேன். ஏனெனில், புனே மைதானத்தில் மட்டுமே ஓட்டங்களை அடிக்கும் அவர், மும்பை மைதானங்களில் பேட்டிங் செய்ய தடுமாறி வருகிறார். இதுபோன்று விளையாடினால் இந்திய அணி உங்களை தெரிவுசெய்வது கடினம். ஏனெனில், மும்பை மைதானத்தில் நீங்கள் தடுமாறி வருவதை பி.சி.சி.ஐ. கவனித்துவரும்.

இதனால் உங்களுக்கு இந்திய அணியில் விளையாடும் வாய்ப்பு பறிபோகலாம். எனவே, இனிவரும் போட்டிகளில் மும்பை மைதானங்களிலும் நன்றாக ஆடவேண்டும் என்று எச்சரிக்கை விடுக்கும் அளவில் தோனி அறிவுரை கொடுத்துள்ளதாக கூறப்படுகிறது.

# சம்பியன்ஸ் லீக் போட்டியில் பங்கேற்க ரஷ்ய கிளப் கால்பந்து அணிகளுக்குத் தடை!

## ஐரோப்பிய கால்பந்து சங்க நிர்வாகக் குழு அறிவிப்பு

உக்ரைன் மீது போர் தொடுத்துள்ள ரஷ்யாவுக்கு பல்வேறு விளையாட்டு அமைப்புகள் தடை விதித்துள்ளன. இந்நிலையில், ஐரோப்பிய கால்பந்து கூட்டமைப்பு ரஷ்யா மீது அதிரடி நடவடிக்கையை எடுத்துள்ளது.

அடுத்த சீசன் சாம்பியன் லீக் மற்றும் பிற அனைத்து ஐரோப்பிய போட்டிகளிலும் ரஷ்யா கிளப் கால்பந்து அணிகள் பங்கேற்க தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதை ஐரோப்பிய கால்பந்து சங்க நிர்வாகக் குழு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில், “2022-23 ஆம் ஆண்டு சீசனில் கிளப் போட்டிகளில் எந்த ரஷ்ய கிளப் அணிகளும் விளையாட அனுமதி கிடைக்காது. மேலும் அறிவிப்பு வரும்வரை ரஷ்ய கிளப் அணிகள் மற்றும் தேசிய அணிகள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளது. இதன்மூலம் இங்கிலாந்தில் ஜூலை மாதம் நடக்கும் பெண்கள் ஐரோப்பிய சம்பியன்ஷிப் போட்டியிலிருந்து ரஷ்ய அணி விலக்கப்பட்டது. அதற்கு பதில் போர்த்துக்கல் அணி இடம் பெற்றது. மேலும் 2028 அல்லது 2032ஆம் ஆண்டு ஐரோப்பிய சாம்பியன்ஷிப் போட்டி நடத்தும் ரஷ்யாவின் முயற்சியும் தகுதி இல்லாதது - என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# லா லிகா கால்பந்து தொடரில் ரியல் மாட்ரிட் 35ஆவது முறையாகவும் சம்பியனானது



91ஆவது லா லிகா கிளப் கால்பந்து தொடர் ஸ்பெயினில் நடந்து வருகிறது. 20 அணிகள் பங்கேற்றுள்ள இந்தப் போட்டியில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டமொன்றில் ரியல் மாட்ரிட் அணி 4-0 என்ற கோல் கணக்கில் எஸ்பான்யோல் கிளப்பை தோற்கடித்தது. ரோட்ரிகோ 2 கோலும், மார்கோ அசென்சியோ, கரிமா பெஞ்சிமா ஆகியோர் தலா ஒரு கோலும் அடித்தனர்.

இன்னும் 4 லீக் ஆட்டங்கள் எஞ்சியுள்ள நிலையில் ரியல் மாட்ரிட் அணி சம்பியன் கிண்ணத்தை 35ஆவது முறையாக கைப்பற்றியது. இதுவரை 34 ஆட்டங்களில் ஆடியுள்ள ரியல்மாட்ரிட் 25 வெற்றி, 6 டிரா, 3 தோல்வி என்று 81 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. செவில்லா 64 புள்ளிகளுடன் 2ஆவது இடத்திலும், பார்சிலோனா 63 புள்ளிகளுடன் 3ஆவது இடத்திலும் உள்ளன.

லா லிகா போட்டி வரலாற்றில் அதிக முறை பட்டம் வென்ற அணிகளின் பட்டியலில் ரியல் மாட்ரிட் (35 பட்டம்) முதலிடத்தில் நீடிக்கிறது. பார்சிலோனா கிளப் 26 பட்டங்கள் வென்று அடுத்த இடத்தில் இருக்கிறது.




# நிதிஷ் ராணாவின் அதிரடி ஆட்டத்தால் ராஜஸ்தானை வீழ்த்தியது கொல்கத்தா



ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் நேற்றுமுன்தினம் மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் ராஜஸ்தான் ராயல்ஸ் - கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதின.

நுாணய சூழ்ச்சியில் வென்ற கொல்கத்தா அணி, பந்துவீச்சை தெரிவுசெய்தது. இதையடுத்து முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 152 ஓட்டங்களை சேர்த்தது.

அதிகபட்சமாக அணித் தலைவர் சஞ்சு சாம்சன் 54 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். இதில் 7 நான்கு ஓட்டங்களும் ஒரு ஆறு ஓட்டமும் அடங்கும். ஜோஸ் பட்லர் 22 ஓட்டங்களையும் ரியான் பராக் 19 ஓட்டங்ளையும் பெற்றுக்கொண்டனர்.

இறுதிநேரத்தில் அதிரடி காட்டிய ஹெட்மயர், 13 பந்துகளில் ஒரு நான்கு ஓட்டம் மற்றும் 2 ஆறு ஓட்டங்களும் அடங்கலாக 27 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றுக்கொண்டார்.

கொல்கத்தா தரப்பில் டிம் சவுத்தி 2 விக்கெட் கைப்பற்றினார். உமேஷ் யாதவ், அனுகுல் ராய், ஷிவம் மவி தலா ஒரு விக்கெட் எடுத்தனர்.

இதையடுத்து 153 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா அணியில் ஆரோன் பிஞ்ச் 4 ஓட்டங்களுடன், வெளியேற பாபா இந்திரஜித் 15 ஓட்டங்களும் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். அணித் தலைவர் ஷ்ரேயாஸ் அய்யர் 34 ஓட்டங்களை எடுத்தார்.

பின்னர் ஜோடி சேர்ந்த நிதிஷ்ராணா, ரிங்குசிங்கும் அதிரடியாக விளையாடி அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றனர். நிதிஷ் ராணா 48 ஓட்டங்களும் ரிங்குசிங் 42 ஓட்டங்களும் குவித்து கடைசிவரை களத்தில் இருந்தனர்.

இதற்கமைய, 19.1 ஓவர் முடிவில் கொல்கத்தா அணி 3 விக்கெட் இழப்பிற்கு 158 ஓட்டங்களை பெற்று 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.



TATA IPL 2022
POINTS TABLE
TOP FOUR TEAMS WILL QUALIFY FOR PLAYOFFS

| | | P | W | L | PTS | NRR |
|---|---|---|---|---|---|---|
| 1 | GUJARAT TITANS | 9 | 8 | 1 | 16 | 0.38 |
| 2 | LUCKNOW SUPER GIANTS | 10 | 7 | 3 | 14 | 0.40 |
| 3 | RAJASTHAN ROYALS | 10 | 6 | 4 | 12 | 0.34 |
| 4 | SUNRISERS HYDERABAD | 9 | 5 | 4 | 10 | 0.47 |
| 5 | ROYAL CHALLENGERS BANGALORE | 10 | 5 | 5 | 10 | -0.56 |
| 6 | DELHI CAPITALS | 9 | 4 | 5 | 8 | 0.59 |
| 7 | KOLKATA KNIGHT RIDERS | 10 | 4 | 6 | 8 | 0.06 |
| 8 | PUNJAB KINGS | 9 | 4 | 5 | 8 | -0.47 |
| 9 | CHENNAI SUPER KINGS | 9 | 3 | 6 | 6 | -0.41 |
| 10 | MUMBAI INDIANS | 9 | 1 | 8 | 2 | -0.84 |

FINAL TO BE PLAYED ON MAY 29
iplt20.com | #KKRvRR

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7